ஆண்டறிக்கை 2017

SLAASMB

# இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை

நம்பகத்தன்மையை மேம்படுத்துதல்

இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையானது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதாகும்.

இந்த சபையின் தொழிற்பாடுகள் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகள் (பக்கம் 53 இனை பார்க்கவும்) நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு, முன்வைத்தல் மற்றும் கணக்காய்வின் போது அவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடனும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களுடனும் இணங்குகின்றனவா என்பதனை கண்காணித்தலாகும்

# உள்ளடக்கம்


சபை அங்கத்தவர்கள் ....1

சபை உறுப்பினர்கள்....2

சபையின் அழைப்பாளர்கள்....5

சபையின் பணிக்குழு ....6

சபையின் தொழில்நுட்ப பதவியணியினர் ....7

செயற்பாட்டு மீளாய்வு - 2017....8

2017 இல் நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு மீது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் ....15

2017 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்ட இணக்கப்பாடுகள்....17

2017 ஆம் ஆண்டில் கணக்காய்வு களப்பரிசோதனையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் ....19

செயலாற்றல் புள்ளிப் படிவம்....24

2017 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியவற்றின் பட்டியல்....26

2017 ஆம் ஆண்டில் நிதி அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு அவதானிப்பு கடிதங்கள் மூலம் தொடர்பு கொள்ளப்பட்ட அவதானிப்புக்களுடன் இணங்கிய குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளின் பட்டியல் ....31

கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்காத பட்டியலிடப்பட்ட கம்பனிகள் ....34

CA இலங்கையினால் உருவாக்கப்பட்ட நியமங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகள்....35

கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை ....36

நிதி நிலைமைக் கூற்று....41

நிதிச் செயலாற்றல் கூற்றும் விரிவான வருமானக் கூற்றும்....42

தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று ....43

காசுப்பாய்ச்சல் கூற்று....44

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்....45

குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில் முயற்சிகள் ....53

# சபை அங்கத்தவர்கள்

| | | |
|---|---|---|
| **ஆர் ஏ ஏ ஜயலத்** *FCA, BCom (Sp), MBA, MA Econ (Kansas – USA)*<br>உதவி ஆளுநர் - இலங்கை மத்திய வங்கி | தலைவர்<br>(2017 ஜூன் 15 இலிருந்து) | |
| **டி என் ஆர் சிறிவர்தன** *BA(Hons.), LLB, Attorney-at-Law*<br>நிறுவன பொது பதிவாளர் | முன்னாள் உத்தியோகத்தில் | |
| **டி. எம். எல். ஐ. திசாநாயக்க** *BSc (Sp), (B.Admin)*<br>ஆணையாளர் நாயகம் - இறைவரி ஆணைக்குழு | முன்னாள் உத்தியோகத்தில்<br>(2017 ஜூன் 30 முதல்) | |
| **திருமதி. கே தகநாயக்க** *BCom (Sp), PGDM, M.pub.mgp., FTII*<br>ஆணையாளர் நாயகம் - இறைவரி ஆணைக்குழு | 2017 ஜூன் 22 வரை | |
| **வி பீ விஜயகுணவர்தன** *BA(Hons), MA*<br>பொது இயக்குனர் - இலங்கை பத்திரங்கள் மற்றும் பரிமாற்றம் தரகு | முன்னாள் உத்தியோகத்தில் | |
| **எல் எல் எஸ் விக்ரமசிங்க** *FCA ,FMAAT*<br>பங்குதாரர் - பி.ஆர். டி சில்வா Co, முன்னாள் தலைவர் - இலங்கை பட்டய கணக்கியல் | நியமிக்கப்பட்ட உறுப்பினர் | இலங்கை பட்டய கணக்கியல் நிறுவனம் (இலங்கை பட்டய கணக்கியல்) |
| **ஏ ஹேராத்** *FCA, BSc, MBA, MAFE*<br>பங்குதாரர் - ஏனஸ் என்ட் யங், | நியமிக்கப்பட்ட உறுப்பினர் | இலங்கை பட்டய கணக்கியல் |
| **டபிள்யு டபிள்யு ஜே சீ பெரேரா** *FCA, BSc (B.Admin.), CFE*<br>பங்குதாரர் - KPMG, தலைவர் - இலங்கை பட்டய கணக்கியல் | நியமிக்கப்பட்ட உறுப்பினர் | இலங்கை பட்டய கணக்கியல் |
| **எஸ் என் ஜயசிங்க** *FCMA(UK)*<br>குழு இயக்குனர் நிதி - இலங்கை பிஸ்கட் குழு நிறுவனம் | நியமிக்கப்பட்ட உறுப்பினர் | முகாமைத்துவம் கணக்காளர் பட்டய நிறுவனம் UK (இலங்கை) |
| **பி எல் சி பீரிஸ்** *FCA, Atorney-at-Law*<br>நிர்வாக பங்குதாரர் - பி எல் சி சட்ட அறைகள் | நியமிக்கப்பட்ட உறுப்பினர் | இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் |
| **செல்வி. என் சிவபிரகாசம்** *FCA, FCMA (UK)*<br>தலைமை நிதி அதிகாரி - எட்கென் ஸ்பேன்ஸ் பிஎல்சி | நியமிக்கப்பட்ட உறுப்பினர் | இலங்கை வணிக அறை |
| **ஏ டீ வாஸ் குணசேகர** *FCA, FSCMA*<br>பிரதி பொது முகாமையாளர் - நிதி, சம்பத் வங்கி பிஎல்சி | நியமிக்கப்பட்ட உறுப்பினர் | இலங்கை வங்கியாளர்கள் சங்கம் |
| **திருமதி. எம் டீ ஜீ எல் பெரேரா** *FCA, MBA*<br>துணை பொது இயக்குனர் - இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு கண்காணிப்பு சபை | சபை காரியதரிசி | |

✷ இலங்கை வர்த்தக, கைத்தொழில் கழகங்களின் கூட்டமைப்பு மற்றும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்கள் சபைக்கு நியமிக்கப்பட வேண்டியுள்ளனர்.

# சபை உறுப்பினர்கள்

2017 டிசெம்பர் 31 படி



**ஆர் ஏ ஏ ஜயலத்**

*B Com (Sp), MBA, MAEcon, FCA*

திரு. ஜயலத் 2017 ஜூன் 15 முதல் குழு தலைவராகவுள்ளார், இவர் சர்வதேச நடவடிக்கைகள், உள்நாட்டு நடவடிக்கைகள், கட்டணம் மற்றும் தீர்வு, தகவல் தொழில்நுட்பம் போன்வற்றின் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுனராக 28 வருடம் சேவையாற்றியுள்ளார். வங்கி மற்றும் நிதி, நிதி கட்டுப்பாடு மற்றும் கணக்கியலில் தேர்ச்சி பெற்றவராவார்.



**டி என் ஆர் சிறிவர்தன**

*B.A.(Hons.), LLB, Attorney-at-law*

திரு. சிறிவர்தன நிறுவன பதிவாளர் தினைக்களத்தில் நிறுவன பொது பதிவாளராக 29 வருடங்களுக்கு மேல் கடைமையாற்றினார். இலங்கை பட்டய கணக்கியல் நிலையத்தின் முன்னாள் உத்தியோக அங்கதவராகவும் இலங்கை காப்பீடு ஒழுங்கு முறை ஆணைக்குழு முன்னாள் உத்தியோக அங்கதவராகவும் இருக்கின்றார்.



**டி எம் எல் ஐ திசாநாயக்க**

*BSc(Sp) Business Administration*

திரு. ஐவன் திசாநாயக்க இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆவார். இவர் இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 34 வருட கால சேவையாற்றியுள்ளார். இவர் இலங்கை பொது நிதி கணக்காளர்கள் சங்கத்தின் தொடர் உறுப்பினராகவும் சபை உறுப்பினராகவும் காணப்படுகின்றார். இவரும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் உரிமைச்சான்றாளர் ஆவார்.



**வி பி விஜயகுணவர்தன**

*BA (Hons), MA*

வி. பி. விஜயகுணவர்தன இலங்கை பாதுகாப்பு பரிவர்தனை ஆணைக்குழுவின் பணியாளர் நாயகமாவார். இவர் பரிவர்தனை ஆணைக்குழுவினர் ஒழுங்குமுறையுடனும் மூலதன சந்தை அபிவிருத்தி முயற்சிகளை தேசிய பொருளாதாரத்து அபிலாஷை களுடனும் சேர்த்து சீர்மைத்தார். இவர் சர்வதேச மூலதன சந்தை தகுதியினை லண்டனில் உள்ள பாதுகாப்பு மற்றும் முதலீட்டு நிறுவகத்தில் பெற்றுக்கொண்டார். இவர் முன்னதாக முதலீட்டு பகுர்பாய்வு துறையின் தொழிற்துறை வெனிப்பாட்டாளராகவும் பாதுகாப்பு பரிவர்தனை ஆணைக்குழுவின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு நிதி மேலான்மை பூர்த்தி செய்பவராகவும் பாதுகாப்பு பரிவர்தனை ஆணைக்கு செயலகத்தின் தொழிற்பாடு பங்குதாரதிகள் செயற்திறனை அதிகரிப்பவராகவும் பணிபுரிந்தார்.

# சபை உறுப்பினர்கள்

2017 டிசெம்பர் 31 படி



**எல் எல் எஸ் விக்ரமசிங்க**

***FCA, FMAAT***

திரு. விக்ரமசிங்க இலங்கையின் பட்டய கணக்கீட்டு நிறுவகத்தின் முன்னால் உடனடி தலைவர் ஆவார். இவர் பி.ஆர்.டி.சில்வா எனட் கோ நிறுவனத்தின் பங்காளரும் ஆவார். இவர்க்கு கணக்காய்வு காப்புறுதி சேவைகள் தடவியல் புலணாய்வு வரியரவீடுகளில் 20 வருடத்திற்கான மேலான அனுபவங்கள் உண்டு. ஆசியா மற்றும் கணக்காளர் கூட்டமைப்பின் பணிப்பாளர் சபை உறுப்பினரும் மற்றும் அதில் அரசாங்க மற்றும் கணக்காய்வு குழுவின் உறுப்பினரும் ஆவார். எஸ் எம் பீ குழுவின் சர்வதேச கணக்காளர் கூட்டமைபபின் தலைமை அதிபருமாவார் (FIAC). இலங்கையின் மேன்பட்ட தொழிநுட்ப கல்வி நிறுவனத்தின் அரசு சபையின் உறுப்பினராகவும் கடைமையாற்றினார்



**ஏ ஹேராத்**

***BSc. MBA, MAFE, FCA***

திரு. ஹேராத் இலங்மை மலைத்தீவுகளின் எனஸ்ட் என்ட் யங் நிறுவனத்தின் முதன்மை பங்காளராவும், இலங்கையின் பட்டய கணக்கு நிறுவகம், தெற்காசிய கண்காளர் கூட்டமைப்பின் முன்னாள் அதிபருமாவார். இவர் தற்போது சர்வதேச கணக்காளர் கூட்டமைபபின தொழில்முறை கணக்கியல் சங்க அபிவிருத்தி குழுவின் அதிகாரியாவார். இலங்கையின் பாதுகாப்பு மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவின் ஆணையாளராகவும் கடைமையாற்றுகிறார்.



**டபிள்யு டபிள்யு ஜே சி பெரேரா**

***B.sc(B.Admin.), FCA, CFE***

திரு.பெரேரா இலங்கை பட்டய கணக்கீட்டு நிறுவகத்தின் அதிபராகவும் இலங்மை மலைத்தீவுகளின் கே.பி.எம்.ஜி நிறுவனத்தின் பங்காளராவார். தொழில்முறை நெறிமுறை மற்றும் சுயாதின குழு மற்றும் தெற்காசிய கண்காளர் கூட்டமைப்பின் சிறிய நடுத்தர பயிற்சி குழுவின் உறுப்பினராக பணியாற்றுகிறார். பொது துறையின் நிர்வாக குழுவின் ஆசிய மற்றம் பசுபிக் கணக்காளர் கூட்டமைப்பின் உறுப்பினறுமாவார். மோசடி பயிற்சியாளர் சான்றிதழ்லினை USAயின் சான்றிதழ் பெற்ற மோசடி பயிற்சியாளர் சங்கத்தின் அங்கிகாரத்தையும் பெற்றுள்ளார்.



**எஸ் என் ஜயசிங்க**

***FCMA (UK)***

திரு. ஜயசிங்க இலங்கை பிஸ்கட் குழு நிறுவனத்தின் நிதி குழு இயக்குனராகவும் 27 வருடத்திற்கு மேலான நிதி துறையில் அனுபவங்கொண்டவராகவும் உள்ளார். இவர் பட்டய நிறுவனத்தின் முகாமையாளர் கணக்கின் (CIMA) UK உலக குழுவிலும் CIMAவில் 3 வருட முன்னாள் தலைவராகவும் இருந்தார். இவர் இலங்கை தொழில் துறையின் உடனடி முன்னால் தலைவராகவும் இலங்கை வர்த்தக அரங்கு குழுவில் முக்கிய பதவிவகித்தார்.

# சபை உறுப்பினர்கள்

2017 டிசெம்பர் 31 படி



**பில் எல் சி பீரிஸ்** ***FCA, Attorney-at-Law***

பி. எல். சி. லோ சாம்பர் நிறுவனத்தின் நிர்வாக பங்காளரான திரு. பீரிஸ் முதலீட்டு வங்கி, நிதி மற்றும் சட்டத்துறை ஆகியவற்றில் 22 வருட அனுபவத்தை கணக்கீட்டுள்ளார். இவர் சட்டம் மற்றும் நிதியில் வல்லுனராகவும் மேலும் ஐக்கிய ராஜ்ஜிய முகாமைத்துவ பட்டய நிறுவனத்தின் (CIMA) இறுதி தேர்வில் சித்தியடைந்துள்ளார். தற்போது இலங்கையில் பட்டய கணக்காளர் நிறுவகத்தின் அரசாளும் உறுப்பினாராகவும் கடமையாற்றுகிறார். துற்போது இவர் இலங்கை சட்ட சபையின் பிரதிநிதி உறுப்பினருமாவார்.



**செல்வி. என் சிவபிரகாசம்** ***FCA, FCMA (UK)***

சிவபிரகாசம் எட்கென் ஸ்பென்ஸ் குழுவின் தலைமை நிதி அதிகாரியாகவும் அக்குழுவில் உள்ள பல நிறுவனங்களின் நிருவாக சபையிலும் பணியாற்றுகிறார். இவர் சர்வதேச கப்பல் துறை மற்றம் பொறியியல் கல்லூரியன் கூட்டு முகாமைத்துவ பணிப்பாளராகவும் உள்ளார். மேலும் இவர் பல்வேறு ஒழுங்குமுறை அமைப்புளிலும் சங்கங்களிலும் கடமையாற்றுகின்றார்.



**ஏ டீ வாஸ் குணசேகர** ***FCA, FSCMA***

திரு. டீ. வாஸ் குணசேகர சம்பத் வங்கி பிஎல்சியின் துணை பொது மேலானர் ஆவார். 23 வருடத்திற்குள் காப்பீடு மற்றும் வங்கிதுறைகளில் மூத்த நிர்வாக முகாமைத்துவத்தில் தகுதிவாய்ந்த 18 வருட அனுபவங்கள் உள்ளது. முன்னர் இவர் ஹேட்டன் நெசனல் வங்கியின் தலைமை நிதி அதிகாரியாகவும் ர்டீே காப்புறுதி கூட்டு நிறுவனத்தின் பொது மேளானவராகவும் ஆசிய கூட்டணி காப்புறுதி நிதி மேளானவராகவும் ஃபின்லேலின் கணக்காளராகவும் பணியாற்றியுள்ளார்.



**எம் ஆர் வீ ஆர் மெபுர** ***MBS, Bsc HRM, ACA***

பொது துறை இயக்குனர் திரு மெபுர பொதுத்துறையில் 19 ஆண்டுகள் அனுபவங்களை கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவர் சிலாபத்தில் வரையறுக்கப்பட்ட தோட்டக்கலையின் உறுப்பினராகவும் ஹெக்டர் கோபேகடுவ ஆராய்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் உறுப்பினருமாவார்.

# சபையின் அழைப்பாளர்கள்

2017 டிசெம்பர் 31 படி

*சட்டரீதியான தணிக்கை தரநிலைகள் குழு தலைவர்*



(1)

**1. சுரேன் இராஜகாரிய**
*FCA, FCMA, FCCA*

திரு. சுரேன் இராஜகாரிய இலங்கை KPMGயின் பங்குதாரரும், பொது கணக்கு நடைமுறையில் 30 வருட அனுபவம் கொண்டவர். தற்போது இவர் KPMGயில் தணிக்கை தலைவராக கடமையாற்றுகின்றார். இவர் KPMGஆம் கணக்கு பரிசோதனையில் தரமான உத்தரவாதம் மற்றும் தகவல் இடர் மேலாண்மைக்கும் பொறுப்பாளராக காணப்பட்டார்.

திரு. சுரேன் இராஜகாரிய இலங்கை மேலாண்மை கணக்குகள் பட்டய நிறுவனத்தில் கொள்கை அமைப்பிலும் வழிகாட்டுதல் வழங்களிலும் தீவிரமாக ஈடுப்படுகிறார்.

*சட்டரீதியான தணிக்கை தரநிலைகள் குழு தலைவர்*



(2)

**2. மெனில் ஜெயசிங்க**
*FAC, FCMA, CIPFA*

திரு. மெனில் ஜெயசிங்க இலங்கைக் கணக்கீட்டுத் தராதரங்கள் மற்றும் கணக்காய்வு தராதரங்கள் கண்காணிப்பு சபையின் துணை தலைவரும் சட்டபூர்வ கணக்குப்பதிவியல் தரக் குழுவின் தலைவரும் ஆவர். அத்தோடு இவர் சர்வதேச கணக்கியல் கல்வி தரநிலைகள் மற்றும் கணக்காளர்கள் சர்வதேச கூட்டமைப்பின் உறுப்பினராகவும் காணப்படுகின்றார்.

திரு. மெனில் ஜெயசிங்க இலங்கை எனஸ்ட் யங் நிவனத்தில உத்தரவாதம், மூத்த பங்குதாரர், தொழில்முறை நடைமுறை நிர்வாகஸ்தர், வங்கி மற்றும் நிதி சேவைகளுக்கு பொறுப்பாளராகவும் ஆகியவற்றில் 35 வருட கால விரிவான அனுபவத்தை கொண்டுள்ளார்.

இவர் மேலாண்மை கணக்குகள் பட்டய நிறுவனத்தின் (UK) உறுப்பினராகவும், இலங்கை மேலாண்மை கணக்குகள் பட்டய நிறுவனத்தின் சக உறுப்பினராகவும் பொது நிதி மற்றும் கணக்குப்பதிவியல் பட்டய நிறுவனத்தின் உறுப்பினராகவும் காணப்படுகின்றார்.

*பொது இயக்குனர்*



(3)

**3. செல்வி. டபிள்யு ஜே கே ஜீகனகே**
*B Com(Sp), FCA, CIPPCA*

SLASSஆயின் பணிப்பாளர் நாயகமான ஜீகனகே 36 வருட அனுபவத்தை முன்னனி அரசு துறை நிர்வனங்களிலும் தனிக்கை பட்டய கணக்காளர் நிறுவனத்திலும் நிதி மற்றும் வணிக முகாமையாளராக பணிபுரிந்துள்ளார். இவர் இலங்கை கணக்கியல் தொழில்நுட்ப வல்லுனர் சங்கத்தின் ஆளும் குழுவிலும் பல துணை நிறுவனங்களின் இயக்குனர் குழுவிலும் முன்னணி வணிக பொது நிறுவனங்களிலும் பணிபுரிந்துள்ளார். தொழில் முறை வங்கியாளர்களின் சங்கத்தின் வாழ்நாள் உறுப்பினருமாவார்.

# சபையின் பணிக்குழு






1. திருமதி. ஆஷா அஹமத்
2. திருமதி. அனுஷா ஐ மொஹொட்டி
3. செல்வி. வசந்தா ஜே கே கீகனகே
4. திருமதி. கயனி எல் பெரேரா
5 பீ எஸ் பி ஏக்கநாயக்க
6. செல்வி. எம் எஸ் டி பர்ணாந்து
7. திருமதி. இமல்கா இத்தமல்கொட
8. செல்வி. இஷாரி எம் சில்வா
9. திருமதி. மொனிடா என் பண்டார
10. செல்வி. எம் லக்மாலி ஹேவகே
11. செல்வி. ஹப்ஷ பி ரசாக்
12. திருமதி. திலினிகா மென்மென்திராச்சி
13. திருமதி. ரந்திமா த சில்வா
14. திருமதி. எல் வத்சலா மல்லவராச்சி
15. கே ரசிக எஸ் பண்டார
16. திருமதி. எப் ஷிரோமி அபேகோன்
17. திருமதி. ஆர் ஏ நதிஷானி மனோதிகா
18. எச் எஸ் யு பி ஜயவர்தன
19. திருமதி. டி எம் நிலந்தி தந்தெனி
20. செல்வி. டபிள்யூ ஜி எரங்க அமராசி
21. திருமதி. களனி ஹெட்டியாராச்சி

# சபையின் தொழில்நுட்ப பதவியணியினர்

**செல்வி. வசந்தா ஜெ கே கீகனகே**
*FCA, B.Com(Sp) CIPPCA*
பொது இயக்குனர்

**திருமதி. அனுஷா ஜ மொஹொட்டி**
*FCA, FCMA (UK), FCMA, CGMA, CPA (Aus), BBA (Hons,), MBA (Leicester)*
பிரதி துணை இயக்குனர்

**திருமதி. கயனி எல் பெரேரா**
*FCA, MBA (Finance)*
பொது துணை இயக்குனர்,
சபை செயளாளர்

**திருமதி. ஆஷா அஹமத்**
*FCA*
தொழில்நுட்ப இயக்குனர்

**திருமதி. மொனிடா என் பண்டார**
*FCA, ACA (E&W), BB Mgt (Acc) Sp*
தொழில்நுட்ப இயக்குனர்

**செல்வி. ஹப்ஷ பீ ரசாக்**
*FCA, ACMA (UK), CGMA, MBA (Sri.J)*
தொழில்நுட்ப இயக்குனர்

**செல்வி. டபிள்யூ ஜீ எரங்க அமரரசி**
*FCA, B.Sc (Acc) Sp (Hons.), MBS(Col)*
தொழில்நுட்ப இயக்குனர்

**செல்வி. எம் லக்மாலி ஹேவகே**
*FCA, ACMA(UK), CGMA, MBA (Sri.J)*
தொழில்நுட்ப இயக்குனர்

**திருமதி. இமல்கா இத்தமல்கொட**
*ACA, B.Sc (Fin) Sp*
தொழில்நுட்ப இயக்குனர்

**திருமதி. டிலினிகா மென்மென்திராரச்சி**
*FCA, B.Sc (Acc) Sp (Hons.)*
உதவி தொழில்நுட்ப இயக்குனர்

**திருமதி. களனி ஹெட்டியாராச்சி**
*FCA, B.Sc (Acc) Sp (Hons.)*
உதவி தொழில்நுட்ப இயக்குனர்

**திருமதி. ரந்திமா த சில்வா**
*FCA, B.Sc (Acc) Sp (Hons.)*
உதவி தொழில்நுட்ப இயக்குனர்

**திருமதி. இஷாரி மனுஷ்கா சில்வா**
*FCA, BBA (Acc) Sp (Hons.), MBA (Sri.J)*
உதவி தொழில்நுட்ப இயக்குனர்

**திருமதி. டி எம் நிலந்தி தந்தெனி**
*FCA, BBA (Acc) Sp (Hons.), AIB(SL)*
உதவி தொழில்நுட்ப இயக்குனர்

**திருமதி. எல் வத்சலா மல்லவராச்சி**
*FCA, B.Sc (Acc) Sp (Hons.)*
உதவி தொழில்நுட்ப இயக்குனர்

# செயற்பாட்டு மீளாய்வு – 2017

## 1 அறிமுகம்

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு மதிப்பீட்டுச் சட்டத்தின் கீழ் 1997ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளினதும் நியதிகளினதும் அடிப்படையில் சில நிறுவனங்கள் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களாக (SBE – SBE இனது விளக்கத்திற்காக பக்கம் 53 இனைப் பார்க்க) இனங்காணப்பட்டுள்ளன. இக் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கவும் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் கணக்காய்வாளர்கள் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கவும் அமைய வேண்டும். இலங்கை கணக்கீட்டு நியமங்களினதும் இலங்கை கணக்காய்வு நியமங்களினதும் இணக்கப்பாட்டினை கண்காணிக்க முடிகின்ற வகையில், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் தமது கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென சட்டம் குறிப்பிடுகின்றது. பெறப்பட்ட நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் கணக்காய்வுகளை மேற்பார்வை செய்தல், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களும் அவற்றின் கணக்காய்வாளர்களும் நியமங்களுக்கு அமைவாக செயற்பட்டுள்ளனரா என்பதை ஆராய்ந்து அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களில் அவற்றிற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் ஆகிய துறைகளில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இச்சட்டத்தின் கீழ் இலங்கை கணக்கீட்டு நியமங்களும் இலங்கை கணக்காய்வு நியமங்களும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் பிரகடனப்படுத்தப்படுகின்றன அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. சிபாரிசுகளை வழங்குவதற்கும் அவ்வாறான நியமங்களை ஏற்றுக்கொள்வதற்கான உதவிகளை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு வழங்குவதற்குமாக, கணக்கீட்டு நியமக் குழுவொன்றும் கணக்காய்வு நியமக் குழுவொன்றும் இச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளன. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் சர்வதேச கணக்கீட்டு நியம சபையினால் (IAS) உருவாக்கப்பட்ட சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் (IAS) மற்றும் சர்வதேச நிதியறிக்கையிடல் நியமங்கள் (IFRS) என்பவற்றின் அடிப்படையில் அமைந்த கணக்கீட்டு நியமங்களையே ஏற்றுக்கொள்கின்றன. அதேபோன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நியமங்கள், சர்வதேச கணக்காய்வு மற்றும் உறுதிப்படுத்தல் நியம சபையினால் உருவாக்கப்பட்ட சர்வதேச கணக்காய்வு நியமங்களை அடிப்படையாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. தற்பொழுது நிறுவனம் மேற்குறித்த சர்வதேச நியமங்களுடன் ஒருங்கமைந்த சுமார் 38 கணக்காய்வு நியமங்களையும் 42 கணக்கீட்டு நியமங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் இவை, குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களினதும் அவற்றின் கணக்காய்வாளர்களினதும் இணக்கப்பாட்டினைக் கொண்டிருத்தல் வேண்டும். குறித்த வருடத்தினுள் தனது சட்டரீதியான செயற்பாடுகளை நிறைவேற்றும் வகையில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான சுருக்கமான விளக்கம் கீழ் குறிப்பிடப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்று மீளாய்வு

### 2.1 மீளாய்வின் போது பின்பற்றப்படும் வழிமுறைகள்

குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்யும் பொருட்டு நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இணக்கப்பாடு காணப்படாத சந்தர்ப்பத்தில் இணக்கப்பாடின்மைக்கான காரணத்தை அடிப்படையாக வைத்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அங்கீகாரம் மற்றும் அளவீடு தொடர்பான விடயங்களுடனும் குறிப்பிடத்தக்க வெளிப்படுத்தல் மற்றும் முன்வைத்தலுடன் தொடர்பான விடயங்களுடனும் தொடர்பான இணக்கப்பாடின்மை தொடர்பில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை கூடுதல் கவனம் செலுத்துகின்றது. நியமங்களுடனான இணக்கப்பாடின்மைக்கான குறிப்பிடத்தக்க காரணங்கள் அவதானிக்கப்படாதவிடத்து, அவ்வாறான நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கப்பாடுடையவை என கருதப்படுகின்றன. நிதிக்கூற்றுக்களில் முக்கியம் எனக் கருதப்படும் எனினும் சட்ட நிபந்தனைகள் பயன்படுத்தும் அளவிற்கு முக்கியமற்ற விடயங்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில், அவ்வாறான நிதிக்கூற்றுக்கள் அவதானிப்புகளுடன் இணக்கப்பாடுடையவை எனக் கருதப்படுவதுடன், இவ்வதானிப்புகள், சம்பந்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்கு உதவிக் கடிதம் மூலமாக அறிவிக்கப்படும். நியமங்களிலிருந்து விலகல் காரணமாக நிதி நிலைமைகளிலும் நிதித் தொழிற்பாட்டிலும் கணிசமான மாற்றத்தினை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில், அடுத்து வெளியிடப்படுகின்ற நிதிக்கூற்றில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்காக சம்பந்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களிடமிருந்து அதற்கான மாற்று நடவடிக்கைகள் கோரப்படுகின்றன. எனினும், இவ்வாறான விலகல்கள் காரணமாக நிதிக்கூற்றுகள் தவறாகும் பட்சத்தில், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீளாய்வின் முக்கிய விடயங்கள்

2017 டிசம்பர் 31ஆம் திகதி உள்ளவாறு, 1559 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் அவதானிக்கப்படல் வேண்டுமென இனங்காணப்பட்டிருந்தன. குறித்த வருடத்தினுள், 1479 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் 1643 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருந்ததுடன், அவற்றில் சில நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடங்களுக்குரியவையாக இருந்தன.

2016ஆம் வருடத்தில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை ஊழியர்களுக்கு வெளிநாட்டு நிபுணர் ஒருவரால் வழங்கப்பட்ட விரிவான பயிற்சியின் விளைவாக, ஏனைய கணக்காய்வு முகவர்களால் பின்பற்றப்படுகின்ற உலகலாவிய நடைமுறைகளுக்கேற்ப கணக்காய்வு கண்காணிப்பிற்கான அணுகுமுறைகள் மாற்றப்பட்டன. இப்புதிய அணுகுமுறையானது

# செயற்பாட்டு மீளாய்வு – 2017

கணக்காய்வின் அபாயம் மிகுந்த பிரிவுகளை இனங்கண்டு இப்பிரிவுகள் தொடர்பில் ஆழ்ந்த ஆய்வுகளை நடாத்துவதனைக் கொண்டு ஆரம்பமாகிறது. இப்புதிய அணுகுமுறையின் மூலம் கணக்காய்வுகளின் போது கணக்காய்வு நியமங்களில் ஏற்பட்டிருக்கும் விலகல்களை இனங்காண முடிந்துள்ளது. எனினும், இவ்வாறான ஆய்வுகள் நிறைவடைவதற்கு சுமார் 4-5 நாட்கள் ஆகியுள்ளன.

கணக்காய்வுகளின் விளைவுகளின் தரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றின் காரணமாக, நிதிக்கூற்று மீளாய்விற்காகத் தேவைப்படும் காலம் குறைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதன் காரணமாக, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை குறித்த வருடத்தினுள் சுழற்சியான அனைத்து நிதிக்கூற்றுக்களுடன் மேலதிகமாக ஏனைய குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் ஒரு தொகுதி நிதிக்கூற்றுக்களையும் மீளாய்வு செய்ய முடிந்தது. இதற்கமைய, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை, ஏனைய குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களை 3-5 வருடங்கள் மீளாய்வு செய்ய திட்டமிட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையானது, உயர் அபாயத் தரத்திலிருந்து பொருளாதார ரீதியாக பொருத்தமான குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களாக இணக்கப்பாடடையுச் செய்யும் நோக்கில், அபாயம் மிகுந்த குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதில் கவனம் செலுத்துகிறது.

ஆய்விற்கான மாற்றப்பட்ட அணுகுமுறையின் காரணமாக, வருடத்திற்கான திட்டமிடப்பட்ட 511 நிதிக்கூற்றுகளுடன் ஒப்பிடுகையில், 459 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுடன் சம்பந்தப்பட்ட 518 நிதிக்கூற்றுகளின் மீளாய்வுகள் நிறைவு செய்யப்பட்டன. இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை கடந்த வருடம் 678 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுடன் சம்பந்தப்பட்ட 731 நிதிக்கூற்றுகளை மீளாய்வு செய்ததுடன் புதிய அணுகுமுறை அறிமுகப்படுத்தப்பட்டது அவ்வருடத்தின் இறுதிக் காலாண்டிலாகும்.

## 2.3 சபையின் செயலாற்றல் புள்ளிவிபரங்கள்

| | உருப்படி | முன்னைய மீளாய்வு முறையிலான செயற்றிறன் | | புதிய மீளாய்வு முறையிலான செயற்றிறன் | |
|---|---|---|---|---|---|
| | **வருடம்** | **2014** | **2015** | **2016** | **2017** |
| 1 | இனங்காணப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார் முயற்சிகளின் எண்ணிக்கை (காலப்பகுதி இறுதியில்) | 1,353 | 1,140 | 1,485 | **1,559** |
| 2 | கிடைக்கப் பெற்ற நிதிக்கூற்றுக்கள் | | | | |
| | நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை (பல்வருட கூற்றுகள் உட்பட) | 1,371 | 1,430 | 1,536 | **1,643** |
| | குறி. வியா. முயற்சிகளின் எண்ணிக்கை | 1,289 | 1,345 | 1,412 | **1,479** |
| 3 | நிதிக்கூற்று மீளாய்வு | | | | |
| | மீளாய்வுகளின் எண்ணிக்கை | 1,200 | 1,122 | 731 | **518** |
| | குறி. வியா . முயற்சிகளின் எண்ணிக்கை | 1,151 | 1,068 | 678 | **459** |
| 4 | சீராக்க செயற்பாடுகள் | | | | |
| | இணக்கங்கள்<br>நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை<br>குறி. வியா முயற்சிகளின் எண்ணிக்கை | 498<br>483 | 553<br>534 | 436<br>417 | **324**<br>**306** |
| | அவதானிப்புகளுடனான இணக்கங்கள்<br>நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை<br>குறி. வியா முயற்சிகளின் எண்ணிக்கை | 697<br>674 | 567<br>541 | 291<br>262 | **185**<br>**150** |
| | இணக்கமின்மைகள் (இணக்கத்தைப் பெற்றுக் கொள்ளலும் கட்டளைகளை விதித்தலும்)<br>நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை<br>குறி. வியா முயற்சிகளின் எண்ணிக்கை | 5<br>5 | 2<br>2 | 4<br>4 | **9**<br>**9** |
| 5 | மீளாய்வு செய்யப்பட்ட குறி. வியா முயற்சிகளின் சதவீதத்திலான சீராக்கல் நடவடிக்கைகள் | | | | |
| | இணக்கங்கள்<br>பிரச்சினைகளுடன் இணக்கங்கள்<br>இணக்கமின்மைகள் (இணக்கத்தைப் பெற்றுக் கொள்ளலும் கட்டளைகளை விதித்தலும்) | 42%<br>58%<br>- | 50%<br>50%<br>- | 61%<br>38%<br>1% | **66%**<br>**32%**<br>**2%** |

# செயற்பாட்டு மீளாய்வு – 2017

**2.4.** 2017ஆம் வருடம் நடாத்தப்பட்ட சீராக்கல் நடவடிக்கைகளிலிருந்து 66 வீதமான குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் இணக்கப்பாடுடையனவாகவும், 32 வீதமானவை பிரச்சினைகளுடன் இணக்கப்பாடுடையனவாகவும் 2 வீதமானவை இணக்கப்பாடற்றும் காணப்பட்டமை தெரியவந்தது.

**2.5** 8 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமைகள் மற்றும் நிதித் தொழிற்பாடுகளை கணிசமான அளவில் மாற்றியமைத்திருந்த, இலங்கை கணக்கீட்டு நியமங்களின் குறித்த தேவைகளிலிருந்து பேரளவிலான விலகல்கள் இனங்காணப்பட்டதுடன், இவற்றில் 4 பட்டியல்படுத்தப்பட்ட நிறுவனங்களாகவும் 3 அரச கூட்டுத்தாபனங்களாகவும் இருந்தன. குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளைகள் காரணமாக தேறிய இலாபம்/பங்கிற்கான பெறுமதி ரூபா. 2.2 பில்லியனாகக் காணப்பட்டது. (நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு தொடர்பான அவதானிப்புகளுக்காக பக்கம் 15 இனையும் 2017 இல் மேற்கொள்ளப்பட்ட கட்டளைகளுக்காக பக்கம் 17 இனையும் பார்க்க) கட்டளைகள், வருடாந்த இறுதி நிதிக்கூற்றுகளின் இணக்கப்பாட்டிற்காக கண்காணிக்கப்படும். ஒரு குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனத்தின் கணக்காய்வாளரின் கணக்காய்வு நியமங்களுடனான இணக்கப்பாடின்மை காரணமாக, நிதிக்கூற்றினை மீள் கணக்காய்வுக்குட்படுத்தி மீள் பதிவு செய்யுமாறு குறித்த வியாபார நிறுவனத்திற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

**2.6** இனங்காணப்பட்ட ஒரு இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை, நிரூபிக்கப்பட்டும் அது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் அளவு முக்கியம் வாய்ந்ததாக இல்லாதவிடத்து, அவ்வாறான இணக்கமின்மைகள் உதவிக் கடிதம் மூலமாக அறிவிக்கப்டுகின்றன. வருடத்தினுள் 185 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்கு தமது நிதி அறிக்கையிடல் முறைமையினை மேம்படுத்துவதற்காக உதவிக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

**2.7** 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றினை சமர்ப்பித்திருந்த ஒரு பொதுக் கூட்டுத்தாபனத்திற்கு, கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களை குறித்த நேரத்தில் தகுந்த காரணமின்றி தாமதமடையச் செய்யாது சமர்ப்பிக்கும்படி கூறி எச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டது.

## 3. கணக்காய்வுப் பரிசோதனை

**3.1** வருடத்தினுள் தொழில்துறையில் ஈடுபட்டிருந்த 13 பட்டயக் கணக்காளர்கள் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த 100 கணக்காய்வுகள் பரீட்சிக்கப்பட்டிருந்த அதேவேளை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அவ்வாண்டில் 14 நிறுவனங்களின் மூலம் 99 கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3.2** வருடத்தினுள் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையினை வேண்டுமென்றே பரிசோதனை தினத்திற்குப் பிந்திய ஒரு தினத்தின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்ததன் மூலம் தவறாக வழிநடாத்திய ஒரு கணக்காய்வாளருக்கு எச்சரிக்கைக் கடிதம் வழங்கப்பட்டது.

**3.3** வருடத்தினுள் பரிசோதனைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த கணக்காய்வுக் கோவைகள் அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினூடாகத் தெரிவு செய்யப்பட்டன. அதிகமான அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வுகள் ஒருசில வியாபார அமைப்புகளைச் சேர்ந்தவையாக இருந்ததனால், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டு பரிசோதனைக்காக கணக்காய்வுகளை ஒப்படைத்த வியாபார நிறுவனங்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது.

**3.4** வெளிநாட்டு நிபுணர் ஒருவர் மூலம் வழங்கப்பட்ட விரிவான பயிற்சியினையும், 2016 தேசிய வரவு செலவுத் திட்டத்தினூடாக இயலளவு விருத்திக்காக ஒதுக்கப்பட்ட வரவு செலவு ஒதுக்கத்தினையும் தொடர்ந்து, கணக்காய்வு பரிசோதனை அணுகுமுறையில் கணிசமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. உலகலாவிய நடைமுறைகளுடன் இசைந்து செல்லக்கூடிய புதிய அணுகுமுறையானது, சம்பந்தப்பட்ட அபாயங்களை இனங்காண்பதிலும், அவ்வாறான கணக்காய்வுகளின் தெரிவுசெய்யப்பட்ட அம்சங்களில் ஆழ்ந்த சோதனைகளை நடாத்துவதிலும் பிரத்தியேகமான கவனம் செலுத்துகிறது. இப்புதிய அணுகுமுறையானது ஒரு பரிசோதனையை நிறைவு செய்வதற்கு முன்னைய கணக்காய்வு பரிசோதனை முறைமையினை விடவும் அதிக காலம் எடுத்துக்கொள்வது கண்டறியப்பட்டது.

**3.5** முழு வருடமும் அமுலில் இருந்த இப்புதிய பரிசோதனை முறைமை காரணமாக, கணக்காய்வு பரிசோதனைகளில் கணிசமான இணக்கமின்மைகள் காணப்பட்டதுடன், இதன் விளைவாக, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை ஒரு குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனத்திற்கு தனது நிதிக்கூற்றுக்களை மீள் கணக்காய்வு செய்யுமாறு கோரியதுடன், மற்றுமொரு கணக்காய்வாளருக்கு எச்சரிக்கைக் கடிதம் வழங்கியது. வருடத்தினுள் நடாத்தப்பட்ட பரிசோதனைகளின் விளைவாக, 2016 ஆம் ஆண்டில் 12 நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட 55 கணக்காய்வுகளுடன் ஒப்பிடுகையில் 13 நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட 43 கணக்காய்வுகளில் குறைபாடுகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. குறித்த கணக்காய்வு நிறுவனங்களுக்கு இது தொடர்பான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. (கணக்காய்வு பரிசோதனைகள் தொடர்பான விபரங்களுக்கு பக்கம் 19 இனைப் பார்க்க)

**3.6** கணக்காய்வு பரிசோதனை மீதான அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு புறம்பாக, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை, கருப்பொருள் சார்ந்த பரிசோதனையினை,

# செயற்பாட்டு மீளாய்வு – 2017

இரண்டு கருப்பொருட்களை வைத்து ஆரம்பித்தது. அவை, ஒறுதிப்படுத்தப்பட்ட தர நிர்ணய மீளாய்வின் ஈடுபாடு மற்றும் ஆட்சியுடன் குற்றமிழைக்கப்பட்டவர்களுடனான தொடர்பாடல் ஆகியவையாகும். 6 நிறுவனங்களின் கணக்காய்வுகளின் மீதான 15 கருப்பொருள் சார்ந்த பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. மேலும், விரிவான திட்டங்களை வகுத்தல், கேள்விக் கொத்துகள் மற்றும் விரிவான சட்டகங்களை அமைத்தல் என்பவற்றின் மூலம் 2018ஆம் வருடத்தில் நிறுவன பரந்த தரத்திலான பரிசோதனைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளும் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்டிருந்தன

## 4. புலனாய்வு

### 4.1 வரையறுக்கப்பட்ட அடம் கெப்பிட்டல் கம்பனி

31 மார்ச் 2014 மற்றும் 2015 ஆகிய திகதிகளுடன் முடிவடைந்த ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முறையான நிதியேடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை நிறுவனம் பேணிவரத் தவறியமை குறித்து வரையறுக்கப்பட்ட அடம் கெப்பிட்டல் நிறுவனத்தின் முன்னாள் கணக்காய்வாளர் ஒருவர் மறுப்புக் கருத்துத் தெரிவித்துள்ளார். தரமற்ற ஒரு கருத்து வெளியிடப்பட்டிருந்த, 31 மார்ச் 2016உடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதின்கூற்றுகளின் கணக்காய்வின் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பின்னர், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை கணக்காய்வாளரின் கணக்காய்வு நியமங்களுடனான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. எனினும், கணக்காய்வாளர், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் அவதானிப்புகளுடன் இணங்காத அதேவேளை, இதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்தவும் தவறியிருந்தார். எனவே, குறித்த நிதிக்கூற்றுகளை மீள் கணக்காய்வு செய்யுமாறு சபையின் மூலம் நிறுவனத்திடம் வேண்டப்பட்டது. மீள் கணக்காய்விற்கான மேலதிக செலவினை நிறுவனம் ஏற்க மறுத்ததன் காரணமாக, இது தொடர்பாக கணக்காய்வாளருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் தொடர்பான அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 4.2 அகலவத்த பெருந்தோட்டத் தனியார் கம்பனி

அகலவத்த பெருந்தோட்டத் தனியார் கம்பனி, கணக்காய்வாளரின் உதவியுடன், நிதி தொடர்பான ஆவணங்களை முறையாகப் பேணி வராமை குறித்து இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது. தரமற்ற ஒரு கருத்து வெளியிடப்பட்டிருந்த, 31 டிசம்பர் 2014உடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதின்கூற்றுகளின் கணக்காய்வின் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பின்னர், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை கணக்காய்வாளரின் கணக்காய்வு நியமங்களுடனான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. எனினும், பிழையான நிதிக்கூற்றுகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, 31 டிசம்பர் 2014உடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதின்கூற்றுகளை மீள் கணக்காய்வு செய்து வெளியிடுமாறு சபையினால் நிறுவனத்திற்கு பணிக்கப்பட்டது. மீள் கணக்காய்வினை மேற்கொண்ட அதே கணக்காய்வு நிறுவனத்தின் மற்றொரு ஒப்பந்த பங்கு நிறுவனம், ஏற்கனவே தரமற்ற ஒரு கருத்து வெளியிடப்பட்டிருந்த நிதிக்கூற்றுகள் தொடர்பில் மறுப்புக் கருத்துத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில், நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் சம்பந்தமான அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக, நீதிபதியின் உதவி நாடப்பட்டுள்ளதுடன், கணக்காய்வாளரின் முறைகேடு தொடர்பில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

## 5. பொது வியாபார முயற்சிகள் (COPE) தொடர்பான குழுவின் பரிந்துரைகள் மீதான செயற்பாடு

2014 மற்றும் 2015 ஆகிய வருடங்களில் அனைத்து குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களினதும் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதன் மூலம் COPE இற்கு வழங்கப்பட்ட காரியங்களைத் தொடர்ந்து, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை இணக்கமின்மைகளின் மீதான அவதானிப்புக்களின் தரத்தினை மேம்படுத்தும் ஒரு சிறந்த முறையாக நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுக்காக அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு மாறியது. இதனடிப்படையில், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை அனைத்து குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களையும் 3-5 வருடங்களில் மீளாய்வு செய்வதற்கு உத்தேசித்துள்ளதுடன், இது முறைப்படுத்தப்பட்ட சகல நிறுவனங்களையும் வருடாந்தம் மீளாய்வு செய்தல், உயர் அபாயத்தினையுடைய தனியார் நிறுவனங்களை 3 வருடங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்தல் மற்றும் குறைந்த அபாயத்தினையுடைய தனியார் நிறுவனங்களை 5 வருடங்களினுள் மீளாய்வு செய்தல் என அமைந்திருக்கும். கணக்கீடு மற்றும் கணக்காய்வு 2015 (ROSC) எனும் தரம் மற்றும் குறியீடுகளின் பயன்பாடு தொடர்பான உலக வங்கி அறிக்கையில் உயர் அபாயத்தினையுடைய தனியார் நிறுவனங்கள் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆலோசகர்களாலும் இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், 2016 ஆம் வருடத்தில் பணிக்குழுவின் திறன் விருத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த சர்வதேச ஆலோசகர்களினது உலகலாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் முறையாகவும் இது இனங்காணப்பட்டுள்ளது.

மேலும், 2017 இன் ஆய்வு முடிவுகள், குறிப்பிட்ட நிதிக்கூற்று மீளாய்வின் அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட தெரிவு முறையானது நிதிக்கூற்றுகளினதும் கணக்காய்வினதும் ஒன்றிணைந்த ஆய்வு முறைமையினை வலுப்படுத்தியுள்ளதாக குறிப்பிடுகின்றன. இவ்வாறான

# செயற்பாட்டு மீளாய்வு – 2017

நிதிக்கூற்றுக்களின் மீளாய்வினை நடாத்துவதானது, நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வில் பிரத்தியேகமான விடயங்களை ஆய்வு செய்தல் மீதான கவனத்தினைத் தூண்டியுள்ளதுடன், இது கணக்காய்வில் இணக்கமின்மைகளை இனங்காண்பதற்கு உறுதுணையாக அமைந்துள்ளது.

## 6. நியமங்களை தயாரிப்பதற்காக ஒத்துழைப்பு

நிதி மற்றும் பொது ஊடகத்துறை அமைச்சுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள தற்போதைய ஒழுங்குமுறைக்கிணங்க, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை, கணக்கீட்டு நியமங்கள் குழு மற்றும் கணக்காய்வு நியமங்கள் குழு ஆகியவற்றின் கணக்கீட்டு நியமங்களுக்கான செலவில் ஒரு பகுதியை ஈடுசெய்யும் வகையிலும், இது போன்ற தீர்ப்புகளை சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்த்தல் உட்பட இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களை இலங்கையில் அமுல்படுத்தும் வகையிலும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு வருடாந்தம் ரூபா 2.5 மில்லியனை வழங்குவதனை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வந்தது. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு குழுக்கள் தமது ஒன்றுகூடல்களை மாதத்தில் ஒரு முறை நடாத்துகின்றன. சம்பந்தப்பட்ட கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் தொடர்பான தொழில்நுட்ப விருத்திகள் மற்றும் அபிவிருத்திக்கான வாய்ப்புகளை வழங்கும் வகையில், கணக்கீட்டு நியமங்கள் குழு மற்றும் கணக்காய்வு நியமங்கள் குழுவிற்கான ஒரு அர்ப்பணிப்பு மிகுந்த இணையத்தளம் வெளியிடப்பட்டுள்ளது. (கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்களின் மீட்டல் தொடர்பாக குறித்த வருடத்தினுள் நடாத்தப்பட்ட முக்கிய செயற்பாடுகளுக்காக பக்கம் 35 பார்க்கவும்)

## 7. சர்வதேச தொடர்புகள்

**7.1** சர்வதேச அமைப்புகளுடனான உறுப்புரிமையானது, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்கு, நிதி அறிக்கையிடல், கணக்காய்வு மற்றும் நியமங்களுடனான இணக்கப்பாட்டினை கண்காணித்தல் ஆகியவற்றுடன் தொடர்பான விடயங்களில் உலகலாவிய ரீதியிலான அபிவிருத்திகளுடன் இணைந்து செல்வதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது. இது ஏனைய கட்டுப்பாட்டாளர்களிடமிருந்து தகவல்களையும் உதவிகளையும் பெற்றுக்கொள்வதற்கும், இணைந்த செயற்பாடுகள் என்ற வகையில் பல கட்டுப்பாட்டாளர்களுக்கு பலனளிக்கக்கூடிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குமான ஒரு வழியை அமைத்துள்ளது. குறித்த வருடத்தினுள் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை பின்வரும் சர்வதேச அமைப்புகளுடனான உறுப்புரிமையை தொடர்ந்தது.

அ) சுயாதீன கணக்காய்வு கட்டுப்பாட்டாளர்களின் சர்வதேச அமைப்பு (IFIAR) - இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை 2007ஆம் வருடம் நடைபெற்ற முதலாவது சந்திப்பிலிருந்து IFIAR இன் ஒரு உறுப்புரிமையைப் பெற்றுள்ளது.

ஆ) சர்வதேச கணக்காய்வு மற்றும் உத்தரவாத நியமங்கள் சபையின் ஆலோசனைக் குழு (IAASB) - இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை 2007ஆம் வருடம் IAASB இல் உறுப்புரிமையைப் பெற்றது.

இ) கணக்காளர்களுக்கான சர்வதேச பொறிமுறைகள் நியமங்கள் சபையின் ஆலோசனைக் குழு (IESBA) - இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை 2009ஆம் வருடம் IESBA இல் உறுப்புரிமையைப் பெற்றது.

**7.2** இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் பணிக்குழுவினர், கணக்கீடு மற்றும் அறிக்கையிடலின் சர்வதேச நியமங்கள் தொடர்பான அரசாங்கங்களுக்கிடையிலான நிபுணத்துவக் குழுக்களின் அமர்வுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

**7.3** 2018 ஆம் ஆண்டிற்கான ஆய்வு செயலமர்வினை கொழும்பில் நடாத்த சுயாதீன கணக்காய்வுக் கட்டுப்பாட்டாளர்களுக்கான சர்வதேச அமைப்பினை (IFIAR) அழைப்பதில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை வெற்றியடைந்தது. IFIAR தனது 2018 ஆம் ஆண்டிற்கான செயலமர்வினை 2018 பெப்ரவரி 19-22 திகதிகளில் கொழும்பில் நடாத்துவதற்கான இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் அழைப்பினை ஏற்றுக்கொண்டது. ஐகுஐயுசு வருடாந்தம் இதுபோன்ற செயலமர்வுகளை நடாத்துகின்றது. 40 அதிகாரக் குழுக்களைச் சேர்ந்த 110 இற்கும் அதிகமான பங்கேற்பாளர்கள் கொழும்பு செயலமர்விற்காக பதிவு செய்துள்ளனர். இச் செயலமர்வு சர்வதேசகணக்காய்வுக் கட்டுப்பாட்டாளர்களுக்கு மத்தியில் தமது அறிவையும் அனுபவத்தினையும் பரிமாறிக் கொள்வதற்கும் அறிவு மேம்படுத்தலுக்கான புதிய உத்திகள் மற்றும் கணக்காய்வின் எதிர்கால முன்னேற்றத்திற்கான இலக்குகள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கவும் உதவும்.

**7.4** சர்வதேச கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் தொடர்பான கொள்கைகளை புதுப்பித்தல், புதுவகையான நியமங்கள் தொடர்பான அறிவூட்டல், நியமங்களின் இற்றைப்படுத்தப்பட்ட அபிவிருத்திகள் மற்றும் எதிர்கால முன்னேற்றத்திற்கான இலக்குகள் ஆகியன தொடர்பான சர்வதேச அமர்வுகளிலும் பணிக்குழுவினர் கலந்துகொண்டனர். இவ்வமர்வுகள், சம்பவங்கள் மற்றும் வரைவிலக்கணங்கள் மூலமும் அறிவினை பரிமாற்றும்

# செயற்பாட்டு மீளாய்வு – 2017

சந்தர்ப்பங்களின் ஊக்குவிப்புக்காக சர்வதேச தொடர்புகளை வளர்த்தல் மூலமும் கொள்கைகளின் பிரயோகம் தொடர்பான நடைமுறை வழிகாட்டல்களை வழங்கின. ஏனைய சர்வதேச கட்டுப்பாட்டாளர்களின் கணக்காய்வு பரிசோதனை செயன்முறைகள் தொடர்பாகவும் அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் இது உள்வாங்கப்பட்டிருந்த பரிசோதனை முறைமையினை மேம்படுத்தப்படுவதற்கு உதவியது

**8 மனித வளங்கள்**

**8.1** ஆளணியினர்
2017 இறுதிப் பகுதியில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையில் 22 ஆளணியினர் பணிபுரிந்ததுடன் இதில் 15 பேர் பட்டயக் கணக்காளர்களாயிருந்தனர். மொத்த தொழில்நுட்பப் பணிக்குழுவில் பணிப்பாளர் நாயகம், இரு பிரதிப் பணிப்பாளர் நாயகங்கள், ஆறு தொழில்நுட்ப முகாமையாளர்கள் மற்றும் ஆறு உதவி தொழில்நுட்ப முகாமையாளர்கள் அடங்கியிருந்தனர். தொழில்நுட்பப் பணிக்குழுவில் ஆறு பேர் ஒப்பந்த அடிப்படையிலும் ஒன்பது பேர் நிரந்தர அடிப்படையிலும் நியமிக்கப்பட்டிருந்தனர். பணிக்குழுவினர் வருடத்தினுள் நடைபெற்ற 9 செயலமர்வுகள் மற்றும் பயிற்சித் திட்டங்களில் கலந்துகொண்டமையின் மூலம் நிதி அறிக்கையிடல், கணக்காய்வு மற்றும் விதிமுறைகள் ஆகிய துறைகள் தொடர்பான சர்வதேச அறிவினைப் பெற்றுக் கொண்டனர்.

**8.2 வெளிக்கள மீளாய்வாளர்களின் குழு**
ஊழியூநு இனது பரிந்துரைப்புகளுடன் இணங்கும் வகையில், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை, மீளாய்வு செய்யப்படும் நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் தனது முயற்சியில், நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதற்காக வெளிக்கள மீளாய்வாளர்களின் சேவையினைப் பெற்றுக் கொள்வதை தொடர்ந்து மேற்கொண்டது. வருடத்தினுள் நிறைவு செய்யப்பட்ட நிதிக்கூற்று மீளாய்வுகளில், மீளாய்வாளர்கள் 125 நிதிக்கூற்றுக் கோவைகளினது ஆரம்பக்கட்ட மீளாய்வினை நிறைவு செய்திருந்தனர். வருடத்தினுள் வெளிக்கள மீளாய்வாளர்களின் கொடுப்பனவாக ரூபா 1.9 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. வெளிக்கள மீளாய்வாளர்களினால் பூரணப்படுத்தப்பட்ட, மேலதிகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், திருத்தங்களுக்கான ஒப்பந்தங்களைக் கோரல் மற்றும் அவதானிப்புக் கடிதங்களை வழங்குதல், சட்டத்தின் கீழ் பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய விடயங்கள் உள்ளடங்கிய, மீளாய்வுகள், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் தொழில்நுட்பப் பணிக்குழுவினால் ஃஅேற்கொள்ளப்படுகிறது. மேலும் வருடத்தினுள் நிறைவு செய்யப்பட்ட நிதிக்கூற்று மீளாய்வுகளில், 393 நிதிக்கூற்றுக் கோவைகளினது ஆரம்பக்கட்ட மீளாய்வுகள் சபையின் பணிக்குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

**9 ஆட்சி**

**9.1** சட்டத்தின் அடிப்படையில், சபை 3 நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களையும் அப்போதைய நிதி திட்டமிடல் அமைச்சரினால் இனங்காணப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட முன்மொழிதலினூடாகத் தெரிவு செய்யப்பட் 10 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. கம்பனிப் பதிவாளர் நாயகம், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் மற்றும் பாதுகாப்பு மற்றும் பரிமாற்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரே நிறைவேற்றுக்குழுவின் 3 உறுப்பினர்களுமாவர். நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இலங்கை மத்திய வங்கி, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (3 உறுப்பினர்கள்), ஐக்கிய ராச்சியத்தின் முகாமைத்துவக் கணக்காளர் பட்டைய நிறுவனத்தின் இலங்கைப் பிரிவு, இலங்கை வழக்கறிஞர் சங்கம், இலங்கை வர்த்தகர் சங்கம், இலங்கை வர்த்தக வாணிப சங்கங்களின் சம்மேளனம், இலங்கை வங்கிகளின் சங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழு ஆகியவற்றினால் முன்மொழியப்பட்ட உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களாகக் காணப்பட்டனர். ஒரு அங்கத்தவரின் பதவிக்காலம் 4 வருடங்களாகும்.

**9.2** சபையின் தலைவராக பணிபுரிந்த இலங்கை மத்திய வங்கியின் சட்டபூர்வ மற்றும் இணக்கப்பாட்டு பணிப்பாளர் திரு. பீ.வீ.எல்.நந்தசிரி அவர்கள் 2017 ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி முதல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து புதிய தலைவராக இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுனர் திரு. ஆர்.ஏ.ஏ.ஜயலத் அவர்கள் 2017 ஜுன் மாதம் 15ஆம் திகதி அமுலாகும் வண்ணம் தெரிவு செய்யப்பட்டார். இலங்கை வர்த்தக வாணிப சங்கங்களின் சம்மேளனம் மற்றும் பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழு ஆகியவற்றின் முன்மொழிதல்கள் கிடைக்கப் பெறாததன் காரணமாக சபையின் இரு பதவிகள் வருட இறுதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டன.

**9.3** சட்டரீதியாக சபையின் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட திருவாளர்களான ஏ.டீ.வாஸ் குணசேகர, என். ஜயசிங்க மற்றும் என்.சிவப்பிரகாசம் ஆகியோர் சில குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களில் பணிப்பாளர்களாக அல்லது சிரேஷ்ட அதிகாரிகளாக கடமை புரிந்திருந்தனர். அதேபோன்று, சபையின் மேலும் சில உறுப்பினர்களான திருவாளர்கள். ஏ.ஹேரத், ஜே.பெரேரா மற்றும் எல்.விக்ரமசிங்க ஆகியோர் சில குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களில் கணக்காய்வினை மேற்கொள்கின்ற தொழில்நிலைக் கணக்காளர்களின் நிறுவனங்களின் பங்காளர்களாக செயற்பட்டுள்ளனர். மேலும், சபையின் கண்காணிப்பாளர்களான திருவாளர்கள் டீ.டீ.எஸ்.எச். முதலிகே, எஸ்.ராஜபக்ச, எம்.ஆர். வீ.ஆர்.மீமுர, எச்.எம்.ஏ.ஜயசிங்க மற்றும் டீ.ஜே.எஸ்.ராஜகாரிய ஆகியோர் சில குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் பணிப்பாளர்களாக அல்லது சில குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களில் கணக்காய்வினை மேற்கொள்கின்ற தொழில்நிலைக் கணக்காளர்களின் நிறுவனங்களின் பங்காளர்களாக செயற்பட்டுள்ளனர். சபையின் தனித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனமொன்றோ அல்லது அதன் கணக்காய்வாளரோ சம்பந்தப்பட்ட

# செயற்பாட்டு மீளாய்வு – 2017

அனைத்து ஆவணங்களும் குறித்த குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனத்துடனோ அல்லது கணக்காய்வாளருடனோ தொடர்புள்ள உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுவதிலிருந்து தவிர்க்கப்படுகிறது. அவ்வாறான உறுப்பினர்கள் அக் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் தொடர்பான கலந்துரையாடல்களில் கலந்து கொள்வதில்லை.

**9.4** வருடத்தினுள் சபையின் 12 கூட்டங்கள் நடைபெற்றன. வருடத்தினுள் நடைபெற்ற வாதப் பிரதிவாதங்கள் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வாளர்கள் சம்பந்தப்பட்ட குறிப்பிடத்தக்க தொழில்நுட்பம் சார்ந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அவசியமான ஒட்டுமொத்த செயற்பாட்டுக் குறியீடுகள் மற்றும் நடவடிக்கைகள் சார்ந்த பணிக்குழுவினரின் செயற்பாட்டினை ஈடுசெய்தது. சபையின் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் நியமங்களுடனான இணக்கப்பாடின்மை, வருடாந்த நிதிக்கூற்றுக்கள், வருடாந்த வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களை அனுமதித்தல் ஆகியவை தொடர்பான சிக்கல்கள் தொடர்பிலும் சபை கவனம் செலுத்தியது. மேலும், தொழில்நுட்ப செயற்பாடுகளுக்கான பொருத்தமான பணிக்குழுவினரை கவர்ந்துகொள்ளும் வகையில் பணிக்குழு ஊதியத் திட்டத்தினை திருத்தியமைத்தல் தொடர்பாக பல்வேறு அணுகுமுறைகளை மீளாய்வு செய்வதிலும் சபை ஈடுபட்டது.

**9.5** சபையின் அதிகார ஒப்படைத்தல் கொள்கைக்கமைவாக, தகவல் திரட்டல், நிதிக்கூற்றுகள் மற்றும் கணக்காய்வுகளின் மீளாய்வு மற்றும் விசாரணைகள் ஆகிய நியமங்களுடனான இணக்கப்பாட்டினை கண்காணித்தல் தொடர்பான வழமையான செயற்பாடுகள் இரண்டு பிரதி பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையிலும் வழிகாட்டலிலும் இயங்கும் பணிக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டன.

## 10. நிதிச் செயலாற்றல்

கடந்த வருடத்தின் செலவாகிய ரூபா 94,050,511 உடன் ஒப்பிடுகையில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் வருடத்திற்கான தொழிற்பாட்டுச் செலவு ரூபா 84,352,282 ஆகவிருந்தது. 2016 ஆம் ஆண்டினுள் விசேட ஆற்றல் விருத்தி பாதீடாக ரூபா 21,679,040 செலவிடப்பட்டதன் காரணமாக தொழிற்பாட்டுச் செலவுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. வருடத்திற்கான தொழிற்பாட்டுச் செலவுகளின் அதிகரிப்பு (ஆற்றல் விருத்திக்கான செலவுகள் நீங்கலாக) 16.55% ஆகக் காணப்பட்டது. கடந்த வருடத்தின் செலவாகிய ரூபா 39,350,132 உடன் ஒப்பிடுகையில் வருடத்திற்கான பணிக்குழுவினருக்கான செலவு ரூபா 42,351,100 ஆகவிருந்ததுடன், இது 7.6% அதிகரிப்பினைக் காட்டுகின்றது. இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் தொழிற்பாட்டுச் செலவில் 50.2% பணிக்குழுவினருக்கான செலவாகக் காணப்பட்டது. (ஆற்றல் விருத்திக்கான செலவுகள் நீங்கலாக)

அரசினால் வழங்கப்பட்ட நிதி இன்றியே செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்குப் பதிலீடாக, சபையின் செலவுப் பரிபாலனத்திற்கான சட்டத்தின் கீழ், நிதி அமைச்சரின் தீர்மானத்திற்கமைய வரி அறவிடலின் பின்னரான பங்குதாரரின் பங்குப் பெறுமதி அல்லது இலாபம் ஆகியவற்றினடிப்படையில் கணக்கிடப்பட்ட ஒரு வரி குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படலாம். எனினும் இந்த முறையினை நிதி அமைச்சு விரும்பாததன் காரணமாக 2008 ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படவிருந்த இவ்வரி அறவிடல் திட்டமானது 2008 ஒக்டோபர் 07ம் திகதி அமைச்சரினால் வாபஸ் பெறப்பட்டது.

## 11. முகாமைத்துவத் தகவல் முறையின் (IMS) முன்னேற்றத்தின் நிலைமை

2015 ஆம் ஆண்டில், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை அதன் மீளாய்வுத் தொழிற்பாடுகளை செம்மைப்படுத்துவதற்கான முகாமைத்துவத் தகவல் முறையின் தேவைகளை இனங்கண்டது. இனங்காணப்பட்ட முகாமைத்துவத் தகவல் முறையின் தேவைகளுக்கான MIS சேவை வழங்குனராக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) தெரிவு செய்யப்பட்டதுடன், 2016-2017 இற்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் வரவு செலவுத் திட்டத்தினுள் அபிவிருத்திச் செலவுகளை உள்ளடக்கும் பொறுப்பும் வழங்கப்பட்டது. சேவை வழங்குனரிடம் ஒப்பந்தம் கையளிக்கப்படும் வரை இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்துடனும் திட்ட முகாமுடனும் இணைந்து செயற்பட்டது. எனினும் 2017ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) தனது வரவு செலவுத் திட்டத்தினூடாக குறித்த அபிவிருத்தித் திட்டத்தினை முகாமைப்படுத்த முடியாதென அறிவித்ததன் விளைவாக, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை தனது வரவு செலவுத் திட்டத்தினுள் நிதி முகாமை செய்ய முடிகின்ற பொழுது வேறொரு சேவை வழங்குனரினூடாக இத்திட்டத்தினை மீண்டும் ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

# 2017 இல் நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு மீது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

**1. தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு பெறப்பட்ட பணிகள்**

நிதிக்கூற்றுக்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஏழு குறித்துரைக்கப்பட்ட வணிகத் தொழில் முயற்சிகளிடமிருந்து (எஸ்பீஈஎஸ்) இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAAS ஆடீ) பணிகளை பெற்றிருந்தது. ரூபா 2.2 பில்லியன் தொகையான தேறிய இலாபங்கள் / மூலதனத்திற்கான திருத்தங்களை இப் பணிகள் விளைவித்திருந்தன.

மேலும், சரியானதும் நியாயமானதுமான வகையில் சமர்ப்பிக்கும் விடயத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றிற்கு நெறிப்படுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதற்கு அதன் கணக்காய்வாளர்கள் தவறியமையால் அதன் நிதிக்கூற்றுக்களை மீளக் கணக்காய்வு செய்து மீளப் பிரசுரிப்பதற்கு எஸ்பீஈ இற்கு நெறிப்படுத்தலொன்று வழங்கப்பட்டிருந்தது.

எஸ்பீஈஎஸ் உடன் இணங்காத இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கான (முன்நிர்ணயிக்கப்பட்ட எஸ்எல்எவ்ஆர்எஸ்/எல்கேஏஎஸ்) குறிப்புரையுடன் சேர்த்து பெறப்பட்ட பணிகளிற்கான விடயங்களின் வகைகள் பின்வருமாறுள்ளன.

- தாய் மற்றும் துணைக்கம்பனிக்கிடையேயான தொடர்புபட்ட தரப்பினர் ஒழுங்குபடுத்தலொன்று உத்தேச சொத்தொன்றாக பிழையாக இனங்காணப்பட்டமை (தொடர்பு: எல்கேஏஎஸ் 39 பந்தி 9 மற்றும் எல்கேஏஎஸ் 24 பந்தி 18 மற்றும் 19)
- நட்டக்கழிவுச் சுட்டிகள் காணப்படும் போது நிதிச் சொத்துக்களின் நட்டக்கழிவுக்காக போதியளவு படிகளை மேற்கொள்ளத் தவறியமை (தொடர்பு: எல்கேஏஎஸ் 39 பந்தி 58)
- உயிரியல் சொத்துக்களை இனங்காண்பதற்கும் நியாயமான பெறுமதியை அளவிடுவதற்கும் தவறியமை (தொடர்பு: எல்கேஏஎஸ் 41 பந்திகள் 5 மற்றும் 12)
- துணைக் கம்பனியொன்றிலுள்ள மூலதனத்தில் தாய்க்கம்பனியின் உரித்துரிமை அக்கறை மாற்றத்தை பிரதிபலிப்பதற்கு தவறியமை (தொடர்பு: எஸ்எல்எவ்ஆர்எஸ் 10 பந்தி 23)
- காப்புறுதி ஒப்பந்தங்களை உரியவாறு இனங்காண்பதற்கும் பொறுப்பு போதுமை பரீட்சிப்பை மேற்கொள்வதற்கும் தவறியமை (தொடர்பு: எஸ்எல்எவ்ஆர்எஸ் 4 பின்னிணைப்பு அ மற்றும் பின்னிணைப்பு ஆ இன் 18(எ) பந்தி)
- ஓய்வூதிய நலன் கடப்பாடுகளிற்கான பொறுப்புக்களை இனங்காண்பதற்குத் தவறியமை (தொடர்பு: எல்கேஏஎஸ் 19 பந்தி 67, 71 மற்றும் 72, எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 28 ஆம் பிரிவு பந்தி 28.15)
- நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பாக வருமானம், விற்பனைக் கிரயம் மற்றும் இருப்பின் பூர்த்தியாக்கல் சதவீத முறையை பிரயோகிக்கத் தவறியமை (தொடர்பு: எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 23 ஆம் பிரிவு பந்திகள் 23.21 – 23.27)

**2. உதவிக் கடிதங்கள்**

நியதிச்சட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தும் நடைமுறையின் பயன்பாட்டை வேண்டுவதற்கு இலங்கை கணக்கீட்டு நியமங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட முக்கியத்துவமான ஆனால் பொருண்மையல்லாத செயன்முறை நீண்ட விசாரணைகளின்றி கடிதம் மூலம் எஸ்பீஈஎஸ் இற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே தேவையான போது அவர்களின் தனித்துவம் மீது சரியான நடவடிக்கையை எடுப்பதற்கு எஸ்பீஈஎஸ் இற்கு முடிந்திருந்தது. ளுடுயுபுளுஆடீஆ இனால் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களை கொண்டிராத அத்தகைய கடிதங்கள் உதவிக் கடிதங்களாக குறிப்பிடப்பட்டிருந்தன.

எஸ்பீஈஎஸ் இற்கு அனுப்பப்பட்ட உதவிக் கடிதங்களுடன் தொடர்புடைய பிரதான கண்டுபிடிப்புக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதி நட்டக்கழிவிடப்பட்டிருந்ததென – 16 எஸ்பீஈஎஸ் இல் நோக்கச் சான்று காணப்பட்ட போது ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் போதியளவு நட்டக்கழிவு படிகளை இனங்காண்பதற்குத் தவறியமை (தொடர்பு: எல்கேஏஎஸ் 39 பந்தி 58)
- தொடர்புள்ள தரப்பினர் உறவுமுறைகளின் தன்மை அதேபோல் தொடர்புள்ள தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தகவல்கள் தொடர்பான போதியளவு வெளிப்படுத்தல்களை – எஸ்எம்ஈ துறையிலுள்ள 3 உள்ளடங்கலாக 29 எஸ்பீஈஎஸ் இல் மேற்கொள்ளத் தவறியமை (தொடர்பு: எல்கேஏஎஸ் 24 பந்தி 18 எஸ்எம்ஈ பிரிவு 33 பந்திகள் 33.9 மற்றும் 33.10)

# 2017 இல் நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு மீது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

- பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு நுட்பங்கள், மதிப்பீட்டு நுட்பங்களிற்கான உள்ளீடுகள், பயன்படுத்தப்பட்ட பொருண்மையான அவதானிக்க முடியாத உள்ளீடுகள் பற்றிய எண்ணிக்கை ரீதியான தகவல்கள், உள்ளீடுகளிற்கு மேற்கொள்ளப்பட்ட முக்கியத்துவமான சீராக்கங்கள் மற்றும் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒவ்வொரு வகைக்கான நியாயப் பெறுமதிப் படிநிலை தொடர்பான போதியளவு வெளிப்படுத்தல்களை – 25 எஸ்பீஈஎஸ் இல் மேற்கொள்ளத் தவறியமை (தொடர்பு: எஸ்எல்எவ்ஆர்எஸ் 13 பந்திகள் 91 மற்றும் 93)

- அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியில் வெளிப்படுத்தப்பட்ட நிறுவனத்திற்கான நிதிக்கருவிகளிலிருந்து எழுகின்ற ஆபத்துக்களின் தன்மை மற்றும் பரப்பு தொடர்பான போதியளவு வெளிப்படுத்தல்களை – 16 எஸ்பீஈஎஸ் இல் மேற்கொள்ளத் தவறியமை (தொடர்பு: எஸ்எல்எவ்ஆர்எஸ் 7 பந்திகள் 31, 36 மற்றும் 37)

- பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்களை இனங்காண்பதிலுள்ள அனைத்து வரி விதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளை – 15 எஸ்பீஈஎஸ் இல் கருத்திற் கொள்வதற்கு தவறியமை (தொடர்பு: எல்கேஏஎஸ் 12 பந்திகள் 15, 20 மற்றும் 24 மற்றும் எஸ்எம்ஈ பிரிவு 29 பந்தி 29.5)

- மீள்பெறுமதியிடல் செல்லுபடியாகும் திகதி, பெறுமதியிடலில் பயன்படுத்தப்பட்ட முறை மற்றும் முக்கியத்துவமான எடுகோள்கள் மற்றும் கிரய முறையின் கீழ் கொண்டுவரப்பட்ட சொத்தாக இனங்காணப்பட்டிருக்கும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கொண்டுசெல்லும் பெறுமதி தொடர்பான போதிய வெளிப்படுத்தல்களை – 9 எஸ்பீஈஎஸ் இல் மேற்கொள்வதற்கு தவறியமை (தொடர்பு: எல்கேஏஎஸ் 16 பந்திகள் 77)

- சொத்துக்களின் கொண்டுசெல்லும் பெறுமதிகளிலிருந்து மீள்பெறுமதியிடப்பட்ட அவற்றின் நியாயப் பெறுமதிகள் பொருண்மையாக வேறுபடும் போது ஒழுங்கான மீள்பெறுமதியிடல்களை – 9 எஸ்பீஈஎஸ் இல் மேற்கொள்வதற்கு தவறியமை (தொடர்பு: எல்கேஏஎஸ் 16 பந்திகள் 34)

# 2017 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்ட இணக்கப்பாடுகள்

**1.** கம்பனியின் சொத்துக்களையும் உரிமையாண்மையையும் அதிகரித்துக் காட்டியமையால் 2014 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தேறிய சொத்து இருந்தமையால் கம்பனி மற்றும் அதனுடைய தலைமைக் கம்பனிக்கிடையில் பொது வரையறுக்கப்பட்ட தன்கொட்டுவ போர்சிலின் கம்பனியானது தொடர்புபட்ட தரப்பினர் ஏற்பாடு தொடர்பாக பெயரளவுச் சொத்தொன்றை இனங்கண்டது.

இது விடயம் தொடர்பில் கணக்காய்வாளர்கள் முனைப்பழியற்ற அபிப்பிராயமொன்றை வழங்கியிருக்கவில்லை.

SLAASMB இனால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளினைத் தொடர்ந்து, நிறுவனமானது ரூபா 260 மில்லியன் தொகையான இனங்காணப்பட்ட நிதி தேறக்கூடிய சொத்தினை நேர்மாறாக எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததுடன் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் உரிமையாண்மையில் அதற்குரிய பதிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.** **ஏசியா கெப்பிட்டல் பீஎல்சீ**

ஏசியா கெப்பிட்டல் பீஎல்சீயானது, 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் துணைக்கம்பனியொன்றின் இருப்புக்களின் தேறிய நிகரக்கூடிய பெறுமதியானது (NRV) அதனுடைய கிரயத்தை விட குறைவாக இருக்கும் போது அதனுடைய கிரயம் மற்றும் தேறிய நிகரத்தக்க பெறுமதியில் குறைவான பெறுமதிகளை வெளிப்படுத்த தவறியமையால் தேறிய சொத்துக்கள் ரூபா 502 மில்லியனால் அதிகரித்தது.

இந்த அசையாத பட இருப்பினால் கம்பனியானது அதனுடைய துணைக்கம்பனியிடமிருந்து (சொல்லப்பட்ட இருப்பை கொண்டுள்ள கம்பனி) அறவிட வேண்டிய தொகைகளில் பெறவேண்டியதை வெளிப்படுத்துவதற்கு தவறியது.

இந்த விடயம் தொடர்பில் கணக்காய்வாளர் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வழங்கினார். எஸ்எல்ஏஏஎஸ்எம்பீயால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து கம்பனியானது 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களிலுள்ள இருப்பின் கொண்டு செல்லும் பெறுமதியை குறைப்பதற்கும் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களில் சொல்லப்பட்ட துணைக்கம்பனியிடமிருந்து பெறவேண்டியவற்றின் நட்டக்கழிவை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தது.

**3.** **சிங்கபுத்ர பினான்ஸ் பீஎல்சீ**

சிங்கபுத்ர பினான்ஸ் பீஎல்சீயானது எல்கேஎஸ் 39 இன் வேண்டுகோளிற்கிணங்க 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கடன்கள் மற்றும் வருமதிகளின் நட்டக்கழிவு படிகளை மதிப்பிடுவதற்கு தவறியது. அதற்கிணங்க, 2016 மார்ச் 31 இ முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கடன்கள் மற்றும் வருமதிகளின் மீதி கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. கணக்காய்வாளர்கள் இது தொடர்பான பாதகமாக அபிப்பிராயத்தை வழங்கினார்.

SLAASMB யால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து நிறுவனமானது எல்கேஏஎஸ் 39 இற்கு இணங்க கடன்கள் மற்றும் வருமதிகள் தொடர்பில் நட்டக்கழிவிற்கான படிகளை இனங்காண்பதற்கு 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலுள்ள ரூபா 362 மில்லியன் தொகையான வசதிகளை பதிவழிப்புச் செய்வதற்கும் கணக்கிடலுக்கு பின்னர் மேலதிக தொகையை பதிவழிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**4.** **ஜனசக்தி பீஎல்சீ**

**i.** **முதலீட்டுச் சொத்து**

ஜனசக்தி பீஎல்சீயானது 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலுள்ள முதலீட்டுச் சொத்தான தேக்குப் பயிர்ச்செய்கை மற்றும் அதனுடைய காணியை அதன் கிரயத்தில் அளவிடுவதன் மூலம் இனங்கண்டது.
இந்த விடயம் தொடர்பில் கணக்காய்வாளர் முனைப்பழியற்ற அபிப்பிராயத்தை வழங்கினார்.

SLAASMB யால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து நிறுவனமானது 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்களிலுள்ள தேக்குப் பயிர்ச்செய்கை மற்றும் அதன் காணியை தனித்தனியாக வகைப்படுத்துவதற்கும் தேக்குப் பயிர்ச்செய்கையின் நியாயப் பெறுமதி மற்றும் விற்பனைக்குத் தயாராகவிருந்த கிரயத்தில் எது குறைவோ அதில் மதிப்பிடுதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தது.

**ii.** **துணைக்கம்பனியை விற்பனை செய்தல்**

ஜனசக்தி பீஎல்சீ ஆனது துணைக்கம்பனியில் தலைமைக் கம்பனியின் உரிமையாண்மை ஈடுபாட்டில் மாற்றத்தை இனங்கண்டமையால் 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரட்டிய நிதிக்கூற்றுக்களில் துணைக் கம்பனியின் விற்பனை இலாபம் ரூபா 524 மில்லியன் தொகையையும் நன்மதிப்பு ரூபா 569 மில்லியன் தொகையையும் இருப்பதால் மேற்கூறப்பட்ட துணைக்கம்பனியின் முழு பங்குரிமையையும் வேறொரு துணைக்கம்பனி பெற்றுக்கொள்கிறது.

இது தொடர்பான விடயங்களில் கணக்காய்வாளர் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வழங்குகின்றனர்.

SLAAS MB யால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, துணைக் கம்பனியில் தலைமைக் கம்பனியின் உரிமையாண்மையிலுள்ள ஈடுபாட்டின் மாற்றத்தை நேரடியாக உரிமையாண்மையில்

# 2017 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்ட இணக்கப்பாடுகள்

இனங்காண்பதற்கும் இனங்காணப்பட்ட ரூபா 564 மில்லியன் தொகையான விற்பனை மூலமான இலாபம் மற்றும் நன்மதிப்பையும் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் தலைகீழாக மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**5. அரச அச்சீட்டு கூட்டுத்தாபனம்**

அரச அச்சீட்டு கூட்டுத்தாபனமானது, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தில் 5 வருட சேவைகளை விட குறைவாகவுள்ள ஊழியர்களினை ஓய்வூதிய நலன்புரி கட்டுப்பாட்டில் அடைவதற்கும் ஓய்வூதிய நலன்புரி கடப்பாட்டை வழங்குவதற்கும் முன்மொழியப்பட்ட அலகு கடன் முறைமையை பயன்படுத்துவதற்கு தவறியது.

மேலும், கூட்டுத்தாபனமானது 2015 மார்ச் திசெம்பர் 31 இல் உள்ளவாறான அனைத்து குறைக்கக்கூடிய / வரிக்குள்ளான தற்காலிக வித்தியாசத்தினை பிற்போடப்பட்ட வரிச்சொத்து / பொறுப்பில் இனங்காண்பதற்கு தவறியிருந்தது.

SLAAS MB இனால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளினைத் தொடர்ந்து, ஓய்வு நலக்கடப்பாடுகளினை தீர்மானிப்பதற்கு மற்றும் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அனைத்து ஊழியர்கள் தொடர்பில் ஓய்வு நலக் கடப்பாடுகளினை இனங்காண்பதற்கு மற்றும் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அனைத்து விலக்களிக்கப்பட்ட/ வரிசெலுத்த வேண்டிய தற்காலிக வித்தியாசங்களுக்கான சொத்து/ பொறுப்புக்கான பிற்போடப்பட்ட வரியொன்றினை இனங்காண்பதற்கு உத்தேச அலகு கடன் முறைமையினை நிறுவகம் பயன்பாட்டிற்கு எடுத்திருந்தது.

**6. இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காப்புறுதி ஒப்பந்தகங்களாகவோ அல்லது நிதிசார் உத்தரவாத ஒப்பந்தங்களாகவோ ஏற்றுமதிக்கான கடன் காப்புறுதி ஒப்பந்தங்களினை கணக்கிடுவதற்கு இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் கணக்காய்வாளர் முனைப்பழியற்ற அபிப்பிராயத்தை வழங்கவில்லை.

SLAASMB இனால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளினைத் தொடர்ந்து, காப்புறுதி ஒப்பந்தங்களாக ஏற்றுமதிக் கடன் காப்புறுதி ஒப்பந்தங்களினை இனங்காண்பதற்கு மற்றும் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பொறுப்பு போதுமை பரிசோதனையினை நிறுவகம் மேற்கொண்டது.

**7. இலங்கை போக்குவரத்து சபை**

2013 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கு இலங்கை போக்குவரத்து சபை (எஸ்எல்ரீபி) முறையான கணக்குகள் புத்தகங்களினை பேணாதிருந்ததன் விளைவாக, உண்மை மற்றும் நேர்மையான முறையொன்றில் அதன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களினை தயாரிப்பதற்கு எஸ்எல்ரீபி தவறியிருந்தது.

இந் நிதிக்கூற்றுக்களின் மீது கணக்காய்வாளர் பாதகமான கருத்தொன்றினை தெரிவித்திருந்தார்.

நிதிக்கூற்றுக்களின் மீளாய்வின் போது இனங்காணப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, அவ்வாறான முயற்சியின் நிதி செயலாற்றல் மற்றும் நிதி நிலைமை உண்மை மற்றும் நேர்மையொன்றினை வழங்கும் நோக்குடன் முறையான கணக்குகள் புத்தகங்கள் பராமரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளினை எடுப்பதற்கு எஸ்எல்ரீபி இற்கு வழிகாட்டலொன்றினை SLAASMB விநியோகித்திருந்தது.

**8. வரையறுக்கப்பட்ட ஸ்பான் என்ஜினியரிங் (தனியார்) கம்பனி**

2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வருமானம், விற்பனைக் கிரயம் மற்றும் பூர்த்தியாக்கல் முறையின் சதவீதத்தின் அடிப்படையில் அடுக்கு மாடி குடியிருப்பின் நிர்மாண இருப்புக்களினை வரையறுக்கப்பட்ட ஸ்பான் என்ஜினியரிங் (தனியார்) கம்பனி இனங்கண்டிருக்கவில்லை.

2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் குறைந்தளவான வெளிப்படுத்தல்களினை சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்ததுடன் 2016 மார்ச் 31 இல் உள்ளபடியான 5 வருடங்களுக்கு குறைந்த சேவையினைக் கொண்டுள்ள ஊழியர்களுக்கான ஓய்வு நலக் கடப்பாடுகள் தொடர்பில் ஏற்பாடொன்றினை இனங்காண்பதற்கு கூட கம்பனி தவறியிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் கணக்காய்வாளர் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வழங்கினார்.

SLAASMB இனால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளினைத் தொடர்ந்து, வருமானம், விற்பனைக் கிரயம் மற்றும் அடுக்கு மாடி குடியிருப்பின் நிர்மாண இருப்புக்களினை இனங்காண்பதற்கு பூர்த்தியாக்கல் சதவீத முறையினை பயன்படுத்துவதற்கு, அனைத்து ஊழியர்கள் தொடர்பில் ஓய்வு நலக் கடப்பாடுகளினை இனங்காண்பதற்கு மற்றும் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வெளிப்படுத்தல்களினை வழங்குவதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருந்தது.

# 2017 ஆம் ஆண்டில் கணக்காய்வு களப்பரிசோதனையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

## 1. அறிமுகம்

2017 ஆம் ஆண்டில், இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (SLAASMB) கணக்காய்வின் தரத்தை மேம்படுத்த வேண்டிய அவசியத்தை அதன் பரிசோதனைத் தந்திரோபாயத்தை ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறைக்கு மாற்றுவதற்கும் வலியுறுத்தியது.

புதிய அணுகுமுறை தொழில், வர்த்தக மற்றும் நிதி அறிக்கைகளை விரிவான மதிப்பீடு செய்வதுடன் அதிக ஆபத்தான விடயங்களை அடையாளம் காண்பதில் கவனம் செலுத்துவதனை மையமாகக் கொண்டு தனது ஆய்வு நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றது. கணக்காய்வுத் தரத்தை மேம்படுத்துவதற்கான முன்முயற்சியாக SLAASMB இந்த அபாய அடிப்படையிலான ஆய்வு அணுகுமுறையை 2016 இன் இறுதி காலாண்டில் ஆரம்பித்தது. தொடர்புடைய ஆபத்தை அடையாளம் காண்பதற்கு, ஆய்வு நோக்கம் குறுகியதாக்கப்பட்டு ஆழமான ஆய்வு ஒன்று நடாத்தப்பட்டது. புதிய அணுகுமுறை கணக்காய்வு ஆய்வு முறைகள் மற்றும் உலகளாவிய கணக்காய்வு ஒழுங்குபடுத்துனர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுடன் ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்துகிறது.

SLAASMB இந்த மாற்றங்களை மையமாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டில் கருப்பொருள் ஆய்வை ஆரம்பித்ததுடன் பல்வேறு கணக்காய்வுகளின் மூலம் ஆழமான பரிசோதனைகளை மேற்கொள்கின்றது.

கணக்காய்வுப் பரிசீலனை மற்றும் கருப்பொருள் ஆய்வு என்பனவற்றை மாற்றியமைப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் விசேட இயலளவைக் கட்டியெழுப்புதல் என்பதன் கீழான நிதி உதவிகளுக்கு அமைய வெளிக்கள பரீட்சகர்களுக்கு வெளிநாட்டு வளவாளர்களினால் பயிற்சி வழங்கப்பட்டது.

SLAASMB 2017 ஆம் ஆண்டில் 13 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட 100 கணக்காய்வுகளை அதற்கு முன்னைய ஆண்டில் 14 நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட 99 கணக்காய்வுகளுடன் ஒப்பிட்டது. இந்த 100 கணக்காய்வுகளில் 85 கணக்காய்வுப் பரிசீலனைகளும் 15 கருப்பொருள் ஆய்வுகளும் காணப்படுகின்றன. மீளாய்வாண்டில் சர்வதேச வலையமைப்பிலுள்ள 5 நிறுவனங்களினால் 75 கணக்காய்வுகளும் 10 விசேட குறித்துரைக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களிலும் (SBE) குறைவான நிறுவனங்களைக் கொண்டுள்ள 5 நிறுவனங்களில் 5 கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

பரிசீலனைகளின் அடிப்படையில், உதவிக் கடிதத்தின் அடிப்படையில் இணக்கமற்ற பிரதிமை தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், கண்டுபிடிப்புக்களின் தீவிர தன்மையின் அடிப்படையில் SLAASMB நிறுவனங்களுக்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்புதல், CA இலங்கையுடன் கலந்துரையாடி நிதி அறிக்கைகள் மீண்டும் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் மற்றும் நிதி அறிக்கைகளை மீண்டும் வெளியிட வேண்டும் என்று கடுமையாக விதந்துரைத்தது. கணக்காய்வு நிறுவனத்தினூடாக கணக்காய்வுத் தரத்தை மேம்படுத்துவதற்கான இச்செயன்முறையில் சில நிறுவனங்களுடன் உரிய துறைகள் தொடர்பாக தொடர்பாடப்பட்டது.

## 2. மீள் கணக்காய்விற்கான வழிமுறைகள்

மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசீலனைகளின் அடிப்படையில் அவதானிக்கப்பட்ட இணக்கமற்ற தன்மையின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் 2 SBE இனது நிதிக் கூற்றுக்கள் மீள் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் என SLAASMB பரிந்துரைத்தது. SBE இந்த ஆண்டின் அறிக்கையை பெற்ற அனைத்து தரப்பினரும் கணக்காய்வு பரிசீலனைகளை மேற்கொண்டு அதே ஆண்டின் மறு ஆய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளின் பிரதிகளை வெளியிட வேண்டுமெனக் குறிப்பிட்டது.

பின்வரும் SBE களிற்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன:

### 2.1 ஆதம் கெப்பிட்டல் பீஎல்சீ

ஆதம் கெப்பிட்டல் பீஎல்சீ நிறுவனத்தின் கணக்காய்வாளர் ஏ. ஐ மாகன் மார்க்கர் அன்ட் கொ, அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட 2016 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகளின் கணக்காய்வுகளைப் பரீட்சித்து இணங்காத கணக்காய்வு அறிக்கைகளின் இணக்கமின்மைக்கான காரணங்களை சுட்டிக் காட்டுவதற்கு அவர்களது கணக்காய்வாளர் தவறியதுடன் சபை நிறுவனத்திற்கு குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்களை மீள் கணக்காய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டலை வழங்கியது. மீள் கணக்காய்வின் போது மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளினால் ஏற்படக் கூடிய மேலதிக செலவினம் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை வினவப்பட்டுள்ளது.

### 2.2. பெயார் பிரைவேட் லிமிடட்

பெயார் வே பிரைவேட் லிமிடட் நிறுவனத்தின் பெயார் வே பிரைவேட் லிமிடட் 2016 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகளின் கணக்காய்வுகளின் அடிப்படையில் அவர்களது கணக்காய்வாளர் இ நுசித் குமாரதுங்க அன்ட் கொ போதிய தொழில்சார் கணக்காய்வு நியமங்களுடனும் தேர்ச்சியுடனும் கணக்காய்வை மேற்கொள்ளத் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. இணக்கமின்மைகளை சுட்டிக்காட்டிய போது கணக்காய்வாளர் அதனை ஏற்றுக் கொண்டதுடன் வேறுபாடுகளைச் சீராக்குவதற்குத் தேவையான படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் சபை சில குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீள் கணக்காய்வை மேற்கொண்டு 2016 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

# 2017 ஆம் ஆண்டில் கணக்காய்வு களப்பரிசோதனையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

நிதிக்கூற்றுகளை மீள் பதிப்பு செய்வதற்கான வழிகாட்டலை வழங்கியது.

### 3. கடந்த ஆண்டில் வழிகாட்டல்களுக்கான தொடர் நடவடிக்கைகள்

**அகலவத்த பிளான்டேஷன் பீஎல்சீ**

அகலவத்த பிளான்டேஷன் பீஎல்சீ இன் 2014 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான குறிப்பிட்ட சில நிதிக்கூற்றுக்களை மீள் கணக்காய்வு மேற்கொண்டு மீள் பதிப்பு செய்யுமாறு சபை வழங்கிய வழிகாட்டல்களுக்கு அமைய கணக்காய்வை மேற்கொண்ட அவர்களது கணக்காய்வாளரின் மற்றொரு பங்குதாரரான ஹுலுகல்ல சமரசிங்க அன்ட் கொ நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ள மறுத்ததனால் மறுப்பு அபிப்பிராயமொன்று முன்பு வெளியிடப்பட்டது. நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக சட்ட ஆலோசனை பெறுவதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனை வினவப்பட்டுள்ளதுடன் கணக்காய்வாளரின் நடவடிக்கை தொடர்பாக CA Sri Lanka ஆலோசனை வினவப்பட்டுள்ளது

### 4. கணக்காய்வுப் பரிசீலனையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

43 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட 13 கணக்காய்வுகளில் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. இலங்கை கணக்கீட்டு தரத்திற்கு அமைய குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு எழுத்து மூலமாக உதவி வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

பிரதான அவதானிப்புக்கள் பின்வருமாறு,

### 4.1. போதிய கணக்காய்வு ஆதாரங்களைப் பெறத் தவறியமை

32 கணக்காய்வுகளில் நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் கணிசமான கட்டுப்பாட்டுச் சோதனைகள் நடைமுறைகளில் இருந்து போதிய கணக்காய்வு அதாரங்களைப் பெற முடியவில்லை.

பின்வரும் குறைபாடுகள் அடங்கும்:

- வங்கிகள், திரட்டிய சீராக்கம், பின்நோக்கிய மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள், இரவல்கள், நானாவித வருமானம், உப நிறுவனங்களில் முதலீடு, கடன்களைக் குறைத்தல் மற்றும் அவற்றின் பெறுவனவுகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பான நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதில் தவறியமை.
- நிதிக்கூற்றுக்களை உறுதி செய்வதற்கான கணக்காய்வு முறைகளைப் பின்பற்றத் தவறியமை.

உதாரணமாக

- o முகாமைத்துவ நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அல்லது முடிவுகளின் ஏற்புடைய தன்மை மற்றும் நம்பகத்தன்மை அல்லது ஏனைய கணக்காய்வு ஆதாரங்களுடன் அவற்றின் இணக்கப்பாடு என்பனவற்றை மதிப்பிடுவதற்கான கணக்காய்வு செயன்முறைகள் பின்பற்றப்படவில்லை.
- o நிறுவனத்தின் சொத்துக்கள் உபகரணங்கள் போன்றவற்றை மதிப்பிவடுதற்காக நியமிக்கப்பட்டவரின் தகுதி தொடர்பான உண்மைத் தன்மையை மதிப்பிடுவதற்குத் தவறியமை.
- o சில சொத்துக்களுடன் முதலீட்டுச் சொத்துக்களின் போதிய தன்மையை மதிப்பிடுவதற்குத் தவறியிருந்தமை, நிறுவனத்திற்குரிய எதிர்கால பொருளியல் நன்மைகளின் நிலையற்ற தன்மைகளின் சுட்டிகளைக் கருத்திற்கொள்ளாமை.
- o உரிய தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொண்ட மீதிகளுக்கு அமைய முகாமைத்துப் பிரதிநிதித்துவம் மற்றும் தொடர்புடைய கட்சியினருக்கு இடையே காணப்படும் இணக்கமின்மையை தீர்த்து வைப்பதற்கு உரிய கணக்காய்வு நியமங்களைப் பயன்படுத்துதில் காணப்படும் திருத்தத் தன்மையை உறுதிப்படுத்தத் தவறியிருந்தமை.
- o வாடிக்கையாளர் மொத்தத் தொகையைச் செலுத்திய பின்பும் சொத்து உரித்துடமையை மாற்றத் தவறியிருந்தமை தொடர்பான சொத்து அபிவிருத்தி நிறுவனம் ஒன்றின் விற்பனை தொடர்பாக உரிய கணக்காய்வு செயன்முறையொன்றை மேற்கொண்டு அதன் பூரணத்துவம் மற்றும் திருத்தத் தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்த தவறியிருந்தமை.
- o பின்முகப் பெறுகை மற்றும் பெறுகை ஒப்பந்தங்களிற்கான காலப்பகுதிகளில் முதனிலை விற்பனையாளரின் செயற்பாட்டின் திருத்தத் தன்மை மற்றும் பாதுகாப்பை ஒதுக்கீடு செய்வதற்கும் மீள் ஒதுக்கீடு செய்வதற்கும் கணக்காய்வு செயன்முறையொன்றை மேற்கொள்ளத் தவறியிருந்தமை.
- o உள்ளகக் கணக்காய்வாளரின் செயற்பாடுகளின் அடிப்படையில் ITGC உத்தரவாதத்தைப் பெறுவதற்கு தகவல் தொழிநுட்ப பொதுக் கட்டுப்பாடுகள் (ITGC) தொடர்பாக உள்ளகக் கணக்காய்வாளரின் நோக்கம் மற்றும் திறமையை மதிப்பிடுவதற்கான கணக்காய்வு செயன்முறையொன்றை மேற்கொள்ளத் தவறியிருந்தமை.
- o கணக்கு மீதிகள் தொடர்பாக திட்டமிடப்பட்ட நிலையான கணக்காய்வு செயன்முறைகள் மேற்கொள்ளப்படவில்லை.
- o பொருண்மையான தவறான பிறழ்கூறாக பயன்படுத்தப்பட்டமை தொடர்பான உள்ளக விடயங்கள் வழங்கப்பட்ட

# 2017 ஆம் ஆண்டில் கணக்காய்வு களப்பரிசோதனையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

போதிலும் மேலதிக கணக்காய்வு செயன்முறையொன்றை மேற்கொள்ளத் தவறியிருந்தமை.

- o பல்வேறு மூலாதாரங்களில் இருந்து பெறப்பட்ட கணக்காய்வு ஆதாரங்கள் தொடர்பான இணக்கமின்மைகள் தொடர்பாக மேலதிக கணக்காய்வு செயன்முறையொன்றை மேற்கொள்ளத் தவறியிருந்தமை.

**4.2. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வில் மோசடிகளினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்களில் இருந்து தவறியிருந்தமை**

16 கணக்காய்வு விடயங்களில் மோசடிகளினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் தொடர்பாகக் கணக்காய்வாளர் கவனம் செலுத்தத் தவறியிருந்தமை. குறைபாடுகளில் அடங்குபவை:

மோசடிகளினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் தொடர்பாக பொதுப் பேரேட்டில் நாட்குறிப்பு பதிவுகள் தொடர்பாக பரீட்சிப்பதற்காக கணக்காய்வு செயன்முறையொன்றை மேற்கொள்ளத் தவறியமை.

உதாரணங்கள்:

- o நாட்குறிப்பு பதிவுகள் செயன்முறைகளில் காணப்படும் தொழில்சார் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கு தவறியிருந்தமை.
- o கட்டுப்பாட்டுப் பரிசோதனையின் அடிப்படையில நாட்குறிப்பு பதிவுகளை மேற்கொள்ளுவதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களின் திருத்தத் தன்மையை மதிப்பிடத் தவறியிருந்தமை.
- o மோசடிகளினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை குறிப்பிடுவதற்கு நாட்குறிப்பு பதிவுகளை மதிப்பிடத் தவறியிருந்தமை.
- o மோசடிகளுடன் கூடிய நாட்குறிப்பு பதிவுகளின் இயல்புகளின் அடிப்படையில் நாட்குறிப்பு பதிவு மாதிரிகளைத் தெரிவுசெய்யத் தவறியிருந்தமை.
- o பிந்திகதியிடப்பட்ட நாட்குறிப்பு பதிவுகளை அங்கீகரிக்கும் போது காணப்படும் மோசடிச் சுட்டிகளை அடையாளம் காணும் போது கணக்காய்வாளர்கள் மீதிகளைக் கவனத்திற் கொள்ளத் தவறியமை.
- o உரிய காலத்தில் ஒரு அலகினால் அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்பு பதிவுகளை பரீட்சிக்கத் தவறியிருந்தமை.
- o நாட்குறிப்பு பதிவுகளை தயாரிக்கும் போது குறிக்கோள், இயல்பு, காலம் மற்றும் கணக்காய்வு செயன்முறைகளை நீடித்தல் என்பனவற்றை இனங்காணத் தவறியிருந்தமை.
- o செயற்றிறனற்ற முகாமைத்துவக் கட்டுப்பாடுகள் தொடர்பான ஆபத்துக்களை கருத்திற் கொண்டு மேற்கொள்ள வேண்டிய கணக்காய்வு செயன்முறைகளைக் கணக்காய்வாளர் கண்டறியத் தவறியிருந்தமை.
- o வருமானத்தில் காணப்படும் மோசடி ஆபத்துக்களை அனுமானிக்கத் தவறியிருந்தமை.

**4.3. மதிப்பிடப்பட்ட மோசடிகளிற்கு பொறுப்புக்கூறத் தவறியிருந்தமை**

11 கணக்காய்வுகளில் அவதானிக்கப்பட்ட மோசடிகள் தொடர்பாக வகை கூறத் தவறியிருந்தமை.

குறைபாடுகளில் அடங்குபவை:

- IT கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு ஆபத்துத் தொடர்பான இணக்கமின்மைகள் தொடர்பான விளைவுகளை மதிப்பிடத் தவறியிருந்தமை.
- கணக்காய்வுத் தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாக கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் காணப்படும் போது கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளை மேற்கொள்ளத் தவறியிருந்தமை.
- கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் போது சிக்கலான கட்டுப்பாடுகளைக் கண்டறியத் தவறியிருந்தமை.
- கண்டறியப்படாத விடயங்கள் தொடர்பாக மேலதிக கணக்காய்வு செயன்முறைகளை மேற்கொள்ளத் தவறியிருந்தமை.
- கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் திருப்திகரமாக இல்லாத கட்டத்தில் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்கு நிகராக கணக்காய்வு செயன்முறையொன்றை மேற்கொள்ளுதல்.
- கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் தவிர்ந்தவிடத்து கட்டுப்பாடுகளின் செயற்றினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆதாரங்களைக் கண்டறிவதற்குத் தேவையான பிரதான செயன்முறை மேற்கொள்வதற்குரிய கணக்காய்வு செயன்முறைகளை மேற்கொள்ளத் தவறியிருந்தமை.

**4.4. கணக்கீட்டு மதிப்பீடுகளையும் சாதாரண பெறுமதிசார் கணக்கீட்டு மதிப்பீடுகளையும் அதனுடன் தொடர்புடைய வெளிப்பாடுகளையும் மதிப்பிடத் தவறியிருந்தமை.**

11 கணக்காய்வுப் பரிசீலனைகளில் கணக்கீட்டு மதிப்பீடுகளை எவ்வாறு முகாமைத்துவம் பயன்படுத்துகின்றது, அவை தொடர்பான மதிப்பீடுகள் தொடர்பான தரவுகள் என்பனவற்றை சரியாக மதிப்பீடுவதற்குத் தவறியிருந்தமை.

குறைபாடுகளில் அடங்குபவை:

- வியாபார பிணைப்புக்களில் காணப்படும் நன்மதிப்பினை இணங்காண்பதற்கு மேற்கொள்ள வேண்டிய கணக்காய்வு செயன்முறைகளை மேற்கொள்ளத் தவறியிருந்தமை.

# 2017 ஆம் ஆண்டில் கணக்காய்வு களப்பரிசோதனையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

- உயர் கணக்கீட்டு மதிப்பீடுகளில் காணப்படும் நிச்சயமற்ற தன்மையின் நியாயப்படுத்தல்களை மதிப்பிடுவதற்கு தவறியிருந்தமை.
- சொத்துக்களின் சாதாரண பெறுமதியை சுயாதீனமாக மதிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகளின் நம்பகதன்மை, முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க எடுகோள்களை மதிப்பிடுவதற்கும் கணக்காய்வாளரிற்குக் காணப்படும் ஆற்றல்.
- கடன்கள் மற்றும் பெற வேண்டிய நிதி என்பனவற்றை சேகரிப்பு முறையில் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளை மதிப்பிடுவதற்கு முகாமைத்துவத்தினால் தழுவப்பட்ட முறைமைகள் மற்றும் பின்பற்றப்பட்ட எடுகோள்கள் என்பன ஏற்றுக் கொள்ளக் கூடியதாகக் காணப்படுகின்றனவா என கணக்காய்வாளர் மதிப்பிடத் தவறியிருந்தமை.
- கடன்கள் மற்றும் பெற வேண்டிய நிதி என்பனவற்றை சேகரிப்பு முறையில் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளின் போது செலுத்தப்படாத வீதங்களை மதிப்பிடுவதற்கு நிறுவனங்களினால் உள்ளீடாகப் பயன்படுத்தப்பட்ட ஆரம்ப தரவுகளின் பூரணத்துவத்தை உறுதிப்படுத்தத் தவறியிருந்தமை.
- தற்போதைய நுகர்வுச் சந்தையின் நிலைமையைப் பிரதிபலிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு நுட்பங்களின் நுகரக் கூடிய உயிரியல் சொத்துகளின் பெறுமதியை மதிப்பிடும் போது பெறுமதி நிர்ணயிப்பு மாதிரிகளின் அளவீடுகளை மதிப்பிடத் தவறியிருந்தமை

### 4.5. பொருண்மையான பிறழ் கூற்றுக்களுடன் தொடர்பான இணக்கமின்மைகளை புரிந்து கொள்ளுதலும் அதன் ஆபத்துக்களை மதிப்பிடுதலும்

8 கணக்காய்வு விடயங்கள் தொடர்பான தவறான கூற்றுக்களுடன் தொடர்பான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

குறைபாடுகளில் அடங்குபவை:

- நிதி அறிக்கையிடல் போன்ற வியாபார செயன்முறைகளில் தகவல் முறைமையைக் கண்டறிவதற்கான கணக்காய்வு செயன்முறைகளை மேற்கொள்ளத் தவறியிருந்தமை.
- மிகவும் சிறந்த பூரணமான கணக்காய்வு செயன்முறையை மேற்கொள்வதற்காக அனைத்து சாத்தியமான ஆபத்துக்களிலும் காணப்படும் குறிப்பிடப்பட்ட ஆபத்துக்களைக் கண்டறியத் தவறியிருந்தமை.
- வருட இறுதியில் கையிலுள்ள பணம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தல் போன்ற விசேட கணக்காய்வு தேவைப்படும் ஆபத்துக்களில் தொழில்சார் நிச்சயமற்ற தன்மைகளில் காணப்படும் ஆபத்துச் சுட்டிகளைப் பிரயோகிக்கத் தவறியிருந்தமை.
- நிதி ஆண்டில் தகவல் தொழிநுட்ப முறைமையில் காணப்படும் மாற்றங்களை மதிப்பிடத் தவறியிருந்தமை.
- நிதிக் கூற்றுகளுடன் தொடர்புடைய இறக்கங்களுடன் தொடர்புடைய பெறுமதிசாரா முதன்மை உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பாக தொழில்சார் நியாயப்படுத்தல் செயன்முறைகளை மேற்கொள்ளத் தவறியிருந்தமை.

### 4.6. தரக் கட்டுப்பாட்டு முறைமையைத் தாபிப்பதற்கும் பராமரிப்பதற்கும் தவறியிருந்தமை.

6 கணக்காய்வு விடயங்களில் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக போதிய தரக்கட்டுப்பாட்டு நடைமுறையை பின்பற்றத் தவறியிருந்தமை

குறைபாடுகளில் அடங்குபவை:

- உயர் கணக்காய்வு ஆபத்துக்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில் தரக்கட்டுப்பாட்டு மீளாய்வாளர் (EQCR) ஒருவரை நியமிப்பதற்குத் தவறியிருந்தமை
- பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் கணக்காய்வை நிறைவேற்றுவதற்கு திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல் ஆகிய விடயங்களில் நுஞஊசு போதிய பங்களிப்புக் காணப்படாமை.
- கணக்காய்வு சபையினால் பெறப்பட்ட குறிப்பிடத்தக்க நியாயப்படுத்தல்கள் மற்றும் முடிவுகள் என்பன தொடர்பாக EQCR போதிய குறிக்கோள்சார் மதிப்பீட்டை மேற்கொள்ளாமை.
- கணக்காய்வு அறிக்கைத் திகதியைத் தொடர்ந்து வரும் திகதியில் அதிக ஆபத்துக் காணப்படும் கணக்காய்வு விடயப் பரப்புக்களை ஆராய்தல்.
- நெறிப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் நேரப் பயன்பாடு தொடர்பான கணக்காய்வு விடயங்கள் மற்றும் ளுடுயுளுஆ கணக்கீட்டு நியமங்கள் தொடர்பாக இணக்கமின்மைகள் தொடர்பான அவதானிப்பு என்பன தொடர்பாக போதிய பங்களிப்பு இன்மை.

### 4.7. மாதிரிகளைத் தெரிவு செய்வதில் ஆதாரங்களின் அடிப்படைகள் காணப்படாமை

6 கணக்காய்வு விடயங்களில் கணக்காய்வு மாதிரிகளுடன் தொடர்புடைய இணக்கமின்மைகள் இனங்காணப்பட்டன.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன:

- மாதிரிகளின் நோக்கங்களை அடையத் தவறியிருந்தமை.
- பரிசோதனைக்காக மாதிரிகளை தெரிவு செய்வதன் அடிப்படையை உருவாக்கத்

# 2017 ஆம் ஆண்டில் கணக்காய்வு களப்பரிசோதனையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

தவறியிருந்தமை. எனவே, கணக்காய்வு செயன்முறைகளின் நோக்கங்களை அடைவதற்கு தேவையான சரியான கணக்காய்வு ஆதாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டி இருந்தது.

- சாகியத்தில் இருந்து மாதிரியைத் தெரிவு செய்யாது அனைத்து விடயங்களுக்கும் சம வாய்ப்பை வழங்குதல்.
- ஏற்றுக் கொள்ளக் கூடிய மாதிரித் தெரிவு நடைமுறையில் இருந்து வேறுபட்ட மாதிரித் தெரிவு நடைமுறை.
- தெரிவு செய்யப்பட்ட மாதிரியில் ஒவ்வொரு விடயத்திற்கும் திருத்தமான கணக்காய்வை மேற்கொள்ளத் தவறியிருந்தமை.
- சாகியம் தொடர்பான முடிவுகளுக்கு வரும் போது மாதிரியைப் பயன்படுத்துவது பொருத்தமான அடிப்படையை உருவாக்குகின்றதா எனக் கண்டறியத் தவறியிருந்தமை.

### 4.8. ஏனைய அவதானிப்புக்கள்

- சில கணக்காய்வுகளை மீளாய்வு செய்த போது நிதிக்கூற்றுக்கள் பொருள்களில் களவு அல்லது பிழை ஏற்பட்டிருக்குமா போன்ற விடயங்கள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளக் கூடிய உறுதிப்பாட்டை வழங்கத் தவறியமை அவதானிக்கப்பட்டது. இதனால் அனைத்துப் பொருள்களையும் கருத்திற் கொண்டு உரிய ஏற்றுக் கொள்ளக் கூடிய நிதி அறிக்கையிடல் கட்டமைப்பிற்கு ஏற்றவாறு கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றை கணக்காய்வாளர் வழங்க முடியவில்லை.
- சில கணக்காய்வுகளில் கணக்காய்வாளர் தொழில்சார் நிச்சய தன்மையைப் பின்பற்றியிருக்கவில்லை. இதனால் பொறுததமற்ற கணக்காய்வுகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றை வழங்குவதற்குத் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.
- முன் மொழியப்பட்ட கூற்றுக்களை வடிவமைப்பதற்குப் பொறுத்தமான பகுப்பாய்வு செயன்முறைகளை உட்படுத்தத் தவறியமை மற்றும் பகுப்பாய்வு செயன்முறைகளின் வெளியீடு பரீட்சிக்கப்பட்ட மாறிகளின் நம்பகமற்ற தன்மைளைக் காட்டும் போது மேலதிக கணக்காய்வு செயன்முறைகளை மேற்கொள்ளாமை போன்ற மேலும் பொதுவான விளைவுகள்.
- இணக்கப்பாடுகளுடன் தொடர்புடைய கணக்காய்வு ஆதாரங்கள் மற்றும் குழு நிதிக் கூற்றுக்கள் மற்றும் துணை நிதிக˙ கூற்றுக்கள் எவ்வாறு பெறப்பட்டன போன்ற விடயங்கள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு கணக்காய்வாளர்கள் தவறியமைபோன்ற பொது கணக்காய்வு அவதானங்கள்.
- அவ்வாறே, இறுதி கணக்காய்வுக் கோப்பைத் தயாரிப்பதற்கான மேல் நோக்கிய கணக்காய்வில் சரியான நிர்வாக நடைமுறைகள் காணப்படாமை அவதானிக்கப்பட்டது. இது உரிய நேரத்தில் கோப்புக்களைத் தயாரித்தல், நம்பகத் தன்மையைப் பேணுதல், பாதுகாப்பு, தொகுப்பு, அடையக் கூடிய தன்மை மற்றும் ஆவணங்களை அணுகுதல்.
- சார்ந்த தரப்பினரின் உறவுகள் மற்றும் பரிமாற்றங்கள் என்பன திருத்தமாக இனங்காணப்படாமை, கணக்கீடு மற்றும்/ அல்லது நிதிக்கூற்றுகளின் முடிய தன்மை போன்றன தொடர்பாக சில கணக்காய்வாளர்கள் போதிய கணக்காய்வு ஆதாரங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை.

## 5. மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

4 கணக்காய்வு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட 13 கணக்காய்வுகள் தொடர்பாக எதிர்காலத்தில் கணக்காய்வாளர்களின் கணக்காய்வை மேம்படுத்துவதற்காக ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

## 6. அறிவுறுத்தல் கடிதம்

கண்டறியப்பட்ட இணக்கமின்மைகளின் வரைவு அவதானங்களிற்கு பொறுப்புக் கூறும் போது தவறான தகவல்களை வழங்கிய கணக்காய்வாளர்களுக்கு அறிவுறுத்தல் கடிதங்கள் வழங்கப்பட்டன.

## 7. விடய பரிசீலனைகள்

6 கணக்காய்வு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட 15 கணக்காய்வுகள் தொடர்பாக தரக்கட்டுப்பாட்டு மீளாய்வாளரை நியமித்தல் மற்றும் நிர்வாகத்தினருடன் அவர்களது தொடர்பாடல் என்பன தொடர்பாக SLAASMB விடய பரிசீலனைகளை மேற்கொண்டது. அவதானிப்புக்கள் தொடர்பான அறிக்கை 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்படும்.

## 8. பரந்த அளவினாலான நிறுவன ரீதியான தர பரிசீலனைகள்

2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து SLAASMB பரந்த நிறுவன ரீதியான தர பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது. இவ்வாண்டில் பதவியணியினர் பரந்த நிறுவன ரீதியான தரப் பரிசீலனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான விபரமான திட்டங்கள் மற்றும் வினாக் கொத்துக்களை தயாரிப்பதன் மேற்கொள்கின்றனர்.

பதவியணியினருக்கு இதற்கான பயிற்சிகள் 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தில் சர்வதேச மதியுரையாளர்களினால் வழங்கப்பட்டது. பரந்த அளவினாலான நிறுவன ரீதியான தரப் பரிசீலனைகள் செய்முறை மீளாய்விற்கு உட்பட வேண்டும் என சுயாதீனமாக முன்வரும் நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும். கணக்காய்வு சூழலில் கணக்காய்வுத் தரத்தை மேம்படுத்துவதற்காக பரவலாக்கப்பட்ட நிறுவன பரிசீலனைகளை SLAASMB உரிய அறிக்கைகளுடன் வெளியிடவுள்ளது.

# செயலாற்றல் புள்ளிப் படிவம்

SLAAMB அதன் வருடாந்த செயலாற்றல் திட்டத்தை தயாரிக்கும் பொருட்டு செயலாற்றல் புள்ளிப் படிவம் பயன்படுத்தியது. 2017 ஆம் ஆண்டிற்கான திட்டம், 2017 இன் உள்ளவாறான திட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான திட்டம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

**நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துவோர்** *எமது இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோரை நாம் எவ்வாறு நோக்குதல் வேண்டும்.*

| இலக்கு | அளவீடுகள் | 2017 திட்டம் திருத்தப்பட்ட | 2017 உள்ளவாறான குறிப்பு | | 2017 திட்டம் |
|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | திட்டத்தின் சதவீதமாக | |
| குறிப்பான வியாபார முயற்சிகளில் உண்மையானதும் நியாயமானதுமான நிருபணம் பிரதிபலிக்கப்படுதல் | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காணப்படுகின்றதா என உறுதிப் படுத்து வதற்காக நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல் | 511 நிதிக்கூற்றுத் தொகுதிகள | 518 நிதிக்கூற்றுத் தொகுதிகள | 101 | 525 நிதிக் கூற்றுத் தொகுதிகள் (குறிப்பு 1) |
| | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காணப்படுகின்றதா என உறுதிப்படுத்து வதற்காக நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்தல் | 100 கணக்காய்வுகள் (15 கருப்பொருள் ஆய்வு உட்பட) | 100 கணக்காய்வுகள் (15 கருப்பொருள் ஆய்வு உட்பட) | 100 | 100 கணக்காய்வுகள் (15 கருப்பொருள் ஆய்வு உட்பட)<br>4 நிறுவனங்களின் விரிவான தரப் பரிசோதனை |

**ஒழுங்குபடுத்தலுக்கு உட்பட்ட நிறுவனத்தின் நோக்கு:** *எமது இலக்கை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஒழுங்குபடுத்தலுக்காக உட்பட்ட நிறுவனங்களை நாம் எவ்வாறு நோக்க வேண்டும். நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோரை நாம் எவ்வாறு நோக்குதல் வேண்டும்?*

| இலக்கு | அளவீடுகள் | 2017 திட்டம் | 2017 இல் உள்ளவாறான குறிப்பு | | 2017 திட்டம் |
|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | திட்டத்தின் சதவீதமாக | |
| நிதிக்கூற்றுக்களை ஒன்று திரட்டுதல் | கிடைக்கப் பெற்ற நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை | 1,559 | 1,479 (SBE's எண்ணிக்கை)<br>1,643 (நிதிக்கூற்றுக்களின் அளவு)<br>***குறிப்பு 1*** | 94.9 | 1,559 |

# செயலாற்றல் புள்ளிப் படிவம்

**உள்ளக செயற்பாட்டு நோக்கு:** *எமது தரப்பினரைத் திருப்திப்படுத்துவதற்காக எவ்வாறான உள்ளக செயற்பாடுகளாக தொடர்புபடுத்தப்பட வேண்டும்.*

| இலக்கு | நடவடிக்கை | 2017 திட்டம் | 2017 உள்ளவாறான குறிப்பு | | 2018 திட்டம் |
|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | திட்டத்தின் சதவீதமாக | |
| ஊழியர் செயலாற்றல் | ஆண்டிற்காக இலக்கிடப்பட்ட செயலாற்றுகைப் புள்ளிகளை அடைந்து கொள்ளல் (குறிப்பு 2) | 29,484 | 28,719 | 97 | 28,296 |
| அறிவை மேம்படுத்துவதன் மூலம் தற்போதைய செயற்பணி இலக்குகளை அடைவதற்கான தடைகளை நீக்குதல | வாராந்த கற்கைச் செயற்பாடுகள் (உள்வாரியாக) | நியமம் தொடர்பான 48 முன்வைப்புகள் | 48 (குறிப்பு 3) | 100 | 48<br>4 நிறுவனங்களின் விரிவான தரப் பரிசோதனை |
| உரிய காலத்தில் பதிலிறுக்கல | கிடைத்த முறைப்பாடுகள், கோரப்பட்ட தெளிவு படுத்தல்கள் மற்றும் பெறப்பட்ட தகவல்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல் | பெற்ற திகதி மற்றும் பதிலிறுத்தல் திகதி நீங்கலாக5 நாட்களுக்குள் | கிடைக்கப்பெற்ற திகதி மற்றும் பதிலளிக்கப்பட்ட திகதி அல்லாமல் 3,4 நாட்கள் | | கிடைக்கப் பெற்ற திகதி மற்றும் பதிலளிக்கப் பட்ட திகதி அல்லாமல் சராசரியாக 5 நாட்கள் |

**குறிப்பு 1**

பின்தொடரலுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக முன்னைய ஆண்டுகள் தொடர்பான நிதிக்கூற்றுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**குறிப்பு 2**

இலக்குகளை அடைவதற்கு அவசியமான செயலாற்றுகைப் புள்ளிகள் அதன் தன்மையிலும் வேலையை முடிப்பதற்கு எடுக்கும் காலத்திலும் தங்கியிருக்கும். பிரச்சினைகளின் சிக்கலான தன்மையும் சாத்தியமான பிரச்சினைகளும் அடையாளங் காணப்பட்டதன் காரணமாக தொழிநுட்ப கலந்துரையாடல்களில் அதிக நேரம் செலவிடப்பட்டது.

**குறிப்பு 3**

பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் ஏனைய ஆறு பெரிய கணக்காய்வு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட முன்வைத்தல் முறைகள் தொடர்பான பயிற்சிநெறிகளில் பங்குபற்றியமையும் இதில் அடங்கும்.

# 2017 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியவற்றின் பட்டியல்

| | குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகள் | நிதியாண்டு முடிவில் |
|---|---|---|
| 1 | அபான்ஸ் இலெக்டிரிகல்ஸ் பிஎல்சீ | 2016 மார்ச் 31 |
| 2 | அபான்ஸ் பினான்ஸ் பீஎல்சீ | 2016 மார்ச் 31 |
| 3 | அபான்ஸ் பிஎல்சீ | 2016 மார்ச் 31 |
| 4 | எக்ஸஸ் இன்ஜினியரீங் பிஎல்சீ | 2017 மார்ச் 31 |
| 5 | எசீஎல் பிளாஸ்ரிக் பீஎல்சீ | 2016 மார்ச் 31 |
| 6 | எசீஎல் பிளாஸ்ரிக் பீஎல்சீ | 2017 மார்ச் 31 |
| 7 | ஏசிஎம்ஈ பிரிண்டிங் அன்ட் பெகேஜிங் பிஎல்சீ | 2017 மார்ச் 31 |
| 8 | எகுயிடி செகுயுரிடீஸ் லிமிடட் | 2016 திசெம்பர் 31 |
| 9 | எகுயிடி ஸ்டொக் புரோகர்ஸ் (பிறைவேட்) லிமிடட் | 2016 திசெம்பர் 31 |
இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை

**இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றும், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை அதிகாரச்சட்டத்தின் 33(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந் விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

# கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை



அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீதுஅபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினைக் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை

# கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தியில் வேண்டப்பட்டதன் பிரகாரம் 2017 திசெம்பர் 31 வரையிலும் நடைமுறைகள் கையேடொன்றைத் தயாரித்து அதற்காகப் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, சபையின் பிரதான வருமான மூலம் அரசாங்க மானியமாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது மீளாய்வாண்டில் ரூபா 9,698,229 அல்லது 10 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் மீண்டெழும் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 59 சதவீதம் முதல் 104.3 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்தன.

| செலவின வகை | மொத்தச் செலவினம் | | அதிகரிப்பு | |
|---|---|---|---|---|
| | 2017 | 2016 | | |
| | ரூபா | ரூபா | ரூபா | சதவீதம் |
| வாடகையும் கட்டிடச் சேவைக் கட்டணமும் | 11,191,842 | 6,234,891 | 4,956,951 | 79.5 |
| மீளாய்வாளர்களிற்கான தொழில்சார் கட்டணங்கள் | 1,920,000 | 940,000 | 980,000 | 104.3 |
| சுர்வதேச பிரயாணம் | 3,994,965 | 2,503,394 | 1,491,571 | 59.6 |

2016 ஆம் ஆண்டில் இயலளவைக் கட்டியெழுப்புதல் நோக்கத்திற்காக விசேட பாதீட்டு ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததுடன், தொழில்சார் கட்டணங்களில் ஒரு பகுதி முன்னைய ஆண்டிற்காக வழங்கப்பட்ட அந்த விசேட பாதீட்டு ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி செலுத்தப்பட்டிருந்தது.

**4. செயற்பாட்டுமீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், குறித்துரைத்த வணிக முயற்சிகளினால்

# கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை

விගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

(எஸ்பீஈஎஸ்) இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுடனான இணங்கியொழுகுதல்களை கண்காணிப்புச் செய்வதே சபையின் பிரதான தொழிற்பாடாக காணப்படுகின்றது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாட்டில் செயற்பாட்டிலுள்ள குறித்துரைத்த வணிக நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கையினை இனங்காண்பதற்கு 2018 மார்ச் 31 வரையிலும் சபை தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அத்துடன், இந்த நோக்கத்திற்காக சபையினால் பொருத்தமானதொரு பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டு அல்லது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, குறித்துரைத்த வணிக முயற்சிகளினால் (எஸ்பீஈஎஸ்) இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுடனான இணங்கியொழுகுதல்களை உறுதிப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டில் சபை 518 நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்திருந்ததுடன், அது 2015 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்கான நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கியிருந்தது.

(இ) சில குறித்துரைத்த வணிக முயற்சிகள் தொடர்பில் சபையினால் கண்டுபிடிக்கப்பட்டு அந்த குறித்துரைத்த வணிக முயற்சிகளுடன் தொடர்பாடல் செய்யப்பட்டிருந்த விடயங்களின் மீது பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 சனவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் நான்கு ஆண்டு காலத்திற்காக தற்போதுள்ள கட்டிடத்தின் முதலாம் மாடியினை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக சபை, இலங்கை வேதாகம இல்லத்துடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. இருப்பினும், மாடியின் மொத்த பரப்பினையும் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்திக்கொள்வதற்கு சபை தவறியிருந்ததுடன், அதற்குப் பதிலாக அந்த பரப்பளவு 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் சபையின் ஏனைய தற்காலிக செயற்பாடுகளிற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டில் அதற்காகச் செய்யப்பட்டிருந்த ரூபா 5,695,341 தொகையான செலவினம் சிக்கனமற்ற செலவினமாகக் காணப்பட்டது.

(ஆ) சபைக்காக முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை (எம்ஐஎஸ்) ஆராய்ந்து, வடிவமைத்து, அபிவிருத்திசெய்து, அமுல்படுத்தும் நோக்கத்திற்காக (சபைக்கும் ஐசீரீஏ இற்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று

# கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை

Auditor General's Department

கைச்சாத்திடப்பட்டிருந்தது) மீளாய்வாண்டில் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்திடமிருந்து (ஐசீரீஏ) ரூபா 1,575,000 பெறுமதியான 15 மடி கணனிகளை சபை பெற்றுக்கொண்டது. இருப்பினும், சபையினால் வழங்கப்பட்ட விளக்கமளித்தல்களின் படி முறைமையினை அபிவிருத்தி செய்து அமுல்படுத்துதல் ஐசீரீஏ இன் பாதீட்டு வரையறைகள் காரணமாக பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் கீழுள்ள உயர் முகாமைத்துவ தரத்தின் 03 பதவிகள், சிரேஸ்ட தரத்திலுள்ள ஒரு பதவி மற்றும் மூன்றாம் தரத்திலுள்ள 02 பதவிகளிற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த உயர் முகாமைத்துவ தரத்திலுள்ள 03 பதவிகளிற்காக நிரந்தர பதவியினைக் காட்டிலும் அதிகளவான நலன்களுடன் அங்கீகரிக்கப்பட்ட ஊதியத்தினை மிகைத்து கூடுதலான கொடுப்பனவுகள் செய்யப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் சபை தொடர் திட்டமொன்றைத் தயாரித்திருக்கவில்லை.

### 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவிங்களிற்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

காலாண்டு அடிப்படையில் அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற இலக்குகள் நிச்சயிக்கப்பட்டு அந்த இலக்குகளிற்கு பொறுப்புடைய உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று, 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதிற்கடமை)

# நிதி நிலைமைக் கூற்று

| உள்ளவாறு | குறிப்பு | 31-திசெ-17<br>ரூபா | 31திசெ -16<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 3 | 24,567,695 | 30,435,576 |
| வைப்புக்கள் | 4 | 6,979,736 | 6,879,736 |
| | | 31,547,431 | 37,315,312 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 5 | 516,831 | 576,864 |
| பெறவேண்டிய கணக்குகள் | 6 | 3,376,423 | 3,177,666 |
| காசு மற்றும் சமமானவை | 7 | 7,927,900 | 2,110,767 |
| | | 11,821,154 | 5,865,297 |
| **மொத்த சொத்துக்கள்** | | 43,368,585 | 43,180,609 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் - அரச மானியம் | 8 | 30,256,006 | 37,208,854 |
| நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடு | 9 | 1,291,425 | 106,458 |
| | | 31,547,431 | 37,315,312 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் - அரச மானியம் | 10 | 1,124,759 | 2,290,471 |
| நானாவித வருமானம் செயலமர்வு | 11 | 6,719,098 | - |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | 12 | 3,977,297 | 3,574,826 |
| | | 11,821,154 | 5,865,297 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | 43,368,585 | 43,180,609 |

*பக்கங்கள் 45 இலிருந்து 52 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களைப் பூரணப்படுத்துவதற்கான முக்கியமானதொரு பகுதியாகும்..*

இந்த நிதிக்கூற்றுக்களை தயாாப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்புச் சபையின் சபை அங்கத்தவர்கள் பொறுப்பாளிகளாவா்.

சபை உறுப்பினா்களுக்காகவும் அவா்கள் சாா்பாகவும். இந்த நிதிக் கூற்றுகளுக்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தலைவர் — உறுப்பினர்

பணிப்பாளர் நாயகம் — நிதி மற்றும் நிருவாக முகாமையாளர்

27 மாசி 2018

# நிதிச் செயலாற்றல் கூற்றும் விரிவான வருமானக் கூற்றும்

| **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | குறிப்பு | 31-திசெ-17 ரூபா | 31திசெ -16 ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| அரச மானியம் | 13 | 86,852,282 | 96,550,511 |
| கழி: இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திற்கு விடுவிக்கப்பட்ட மானியங்கள் | | 2,500,000 | 2,500,000 |
| | | 84,352,282 | 94,050,511 |
| **தொழிற்பாட்டு செலவினங்கள்** | | | |
| சபை உறுப்பினர் படிகள் | | (1,253,250) | (1,552,500) |
| கணக்காய்வாளர் ஊதியம் | 14 | (160,000) | (163,180) |
| பதவியணியினர் கிரயம் | 15 | (42,351,100) | (39,350,133) |
| எரிபொருளும் உராய்வு நீக்கிகளும் | | (1,659,290) | (1,547,910) |
| அச்சீட்டு குறிப்புக்கள் | | (435,225) | (718,034) |
| வாடகையும் கட்டிட சேவைக் கட்டணங்களும் | | (11,191,842) | (6,234,891) |
| பெறுமானத்தேய்வும் காலக்கழிவு செலவினங்களும் | 3 | (9,769,265) | (9,519,116) |
| மின்சாரம் | | (1,391,243) | (1,457,899) |
| மீளாய்வாளர்களுக்கான தொழில்சார் கட்டணங்கள் | | (1,920,000) | (940,000) |
| சர்வதேச அங்கத்துவம் | | (1,778,911) | (1,596,780) |
| புத்தகங்களும் சஞ்சிகைகளும் | | (1,186,311) | (897,565) |
| வெளிநாட்டு பிரயாணம் | | (3,994,965) | (2,503,394) |
| பயிற்சியும் அபிவிருத்தியும் | | (982,649) | (799,130) |
| அனுமதிப்பத்திரமும் காப்புறுதியும் | | (1,005,800) | (822,572) |
| எழுதுகருவிகள் | | (659,804) | (790,041) |
| விசேட இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித் செலவினம் | 16 | - | (21,679,041) |
| ஏனைய நிர்வாகச் செலவினம் | 17 | (4,612,627) | (3,478,325) |
| | | - | - |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் மீள் அளவிடல் இலாபம் (நட்டம்) | | (454,840) | 333,157 |
| நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாட்டில் மீள் அளவீடுகள் தொடர்பான | | 454,840 | (333,157) |
| | | - | - |
| **ஆண்டின் போதான தேறிய மிகை / (குறைவு)** | | - | - |

*45 ஆம் பக்கம் முதல் 52 ஆம் பக்கம் வரையான குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் முக்கியமான பகுதியொன்றாகும்*

# தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று

| | திரட்டண்ட நிதியம்<br>ரூபா |
|---|---|
| 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | - |
| ஆண்டின் போது தேறிய மிகை/குறைவு | - |
| 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | - |
| ஆண்டின் போது தேறிய மிகை/குறைவு | - |
| **2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி** | **-** |

*45 ஆம் பக்கம் முதல் 52 ஆம் பக்கம் வரையான குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் முக்கியமான பகுதியொன்றாகும்.*

# காசுப்பாய்ச்சல் கூற்று

| திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 31-திசெ-17 ரூபா | 31திசெ -16 ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| ஆண்டின் போது தேறிய மிகை / குறைவு சீராக்கங்கள் | | - | - |
| சீராக்கங்கள் | | | |
| இவ்வாண்டுப் பகுதியில் பெறப்பட்ட அரச மானியங்கள் | | 78,656,000 | 98,519,770 |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திற்கு | 13 | (87,307,122) | (96,217,354) |
| நடைமுறையல்லா சொத்துக்களின் பெறப்பட்ட செய்யப்பட்ட | | | |
| பிற்போடப்பட்ட | 3 | (1,575,000) | (7,390,000) |
| பெறுமானத்தேய்வு | 3 | 9,769,265 | 9,519,116 |
| அலுவலக உபகரண விற்பனையால் நட்டம் | | 1 | 7 |
| பணிக்கொடை நிதியத்தின் முதலீடுகள் மீது பெறப்பட்ட வட்டி | | (455,461) | (358,981) |
| நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடு | 15.1 | 1,184,967 | 418,240 |
| செலவிலும் கூடிய வருமானம்/(வருமானத்திலும் கூடிய செலவினம் | | | |
| தொழிற்படு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | | 272,650 | 4,490,798 |
| (வாடகை வைப்புக்களில் ஏற்பட்ட (அதிகரிப்பு)/வீழ்ச்சி) | | (100,000) | (1,740,960) |
| (இருப்புக்களில் ஏற்பட்ட (அதிகரிப்பு)/வீழ்ச்சி | | 60,034 | (55,740) |
| (பெறத்தக்க கணக்குகளில் ஏற்பட்ட (அதிகரிப்பு)/வீழ்ச்சி | | (198,757) | (1,308,246) |
| கொடுபடத்தக்க கணக்குகளில் ஏற்பட்ட (அதிகரிப்பு)/வீழ்ச்சி | | 402,471 | 615,291 |
| IFIAR செயலமர்வு பதிவுக் கட்டணங்கள் கிடைப்பனவு | | 6,719,098 | - |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | | 7,155,496 | 2,001,143 |
| **முதலீட்டு நடவடிக்கைகளினான காசுப்பாய்ச்சல்** | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கொள்வனவு | | (1,793,824) | (1,690,360) |
| பணிக்கொடை நிதியத்தின் முதலீடுகள் மீதான பெறத்தக்க வட்டி | | 455,461 | 307,058 |
| தேறிய காசுப்பாய்ச்சல் | | 5,817,133 | 617,841 |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளினான காசுப்பாய்ச்சல்** | | - | - |
| **காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு (குறைவு)** | | 5,817,133 | 617,841 |
| ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் | | 2,110,767 | 1,492,926 |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 7 | 7,927,900 | 2,110,767 |

*45 ஆம் பக்கம் முதல் 52 ஆம் பக்கம் வரையான குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் முக்கியமான பகுதியொன்றாகும்.*

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 1. கூட்டுத் தகவல்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்கு 2018 மாசி 27 ஆம் நாளன்று சபையின் உறுப்பினர்களது தீர்மானமொன்றின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டது. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையானது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது.

சபையின் தொழிற்பாடு 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வு என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுடன் இணங்கிச் செல்கின்றமையினைக் கண்காணிப்பதேயாகும்.

2017 திசெம்பர் 31 இல் சபையானது 15 நிரந்தர ஊழியர்களையும், 6 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களையும் மற்றும் 1 ஊழியர் ஒப்பந்த அடிப்படையிலும் உள்ளடக்கியுள்ளது. (2016 திசெம்பர் 31 இலுள்ளவாறு 15 நிரந்தர ஊழியர்களும் 5 ஒப்பந்த ஊழியர்களும் இருந்தனர்)

## 2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

### தயாரிப்பிற்கான அடிப்படை

சபையின் நிதிக்கூற்றுக்கள் கணக்கீடுகளின் அட்டுறு அடிப்படைக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் வரலாற்று ரீதியிலான செலவு மரபுகளின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம் முழுவதும் கொள்கைமாறாத அடிப்படையில் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

### அறிக்கையிடலுக்கு பின்னரான நிகழ்வுகள்

நிதி நிலைமைக் கூற்றுக்களின் திகதிக்குப் பின்னரான அனைத்து பொருண்மையான நிகழ்வுகளும் பரிசீலிக்கப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டன.

### ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பன திரட்டிய பெறுமானத்தேய்வு கழித்துக் காட்டப்பட்டுள்ளன. தேய்மானம் நிதியியல் செயலாற்றல் கூற்றில் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் நேர்கோட்டு அடிப்படையில் பின்வருமாறு விதிக்கப்படுகின்றன.

| விபரம் | பயன்படு ஆயுட் காலம் |
|---|---|
| மோட்டர் வாகனங்கள் | 5 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 4 வருடங்கள் |
| தளபாடங்கள், பொருத்திகள் | 6-10 வருடங்கள் |
| புத்தகங்களும் வெளியீடுகளும் | 3 ஆண்டுகள் |

கொள்வனவு செய்யப்படும் ஆண்டில் காட்டப்படுவதுடன் விற்பனையானது பயன்படுத்தப்பட்ட காலத்தில் காட்டப்படும். முழுமையான தேய்மானம் கொள்வனவு செய்த மாதத்தில் காட்டப்படுவதுடன் விற்பனை செய்த மாதத்தில் தேய்மானம் காட்டப்படமாட்டாது.

கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கேற்ப நூல்கள் மற்றும் வெளியீடுகள் தவிர்ந்த ரூபா 7,500/- செலவினை விஞ்சாத அனைத்துப் பொருட்களினதும் கொள்வனவுகளும் ரூபா 1,000/- இனை விஞ்சாத ஏனைய வெளியீடுகளின் கொள்வனவுகளும் ஆண்டுக் கொள்வனவுச் செலவினமாகக் கருதப்படும்.

### இருப்புக்கள்

இருப்புக்கள் குறைந்த செலவிலும் பெறத்தக்க பெறுமதியைக் கழித்தும் மதிப்பிடப்படுகின்றன. இருப்புக்களின் செலவு முதலில் வருவது முதலில் செல்லும் (FIFO) என்பதன் அடிப்படையினைப் பயன்படுத்தி பெறப்பட்டது.

### பெற வேண்டிய கணக்குகள்

பெற வேண்டிய கணக்குகளில் பெறப்பட வேண்டிய தொகைகளில் தேறக்கூடிய மதிப்பிடப்பட்ட பெறுமதியே காட்டப்படுவதுடன்

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

தேவையானவிடத்து ஐயக் கடனும் மற்றும் அறவிட முடியாத கடனுக்கான ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**காசு மற்றும் காசுக்கு சமமானவை**

கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் செலவில் மேற்கொள்ளப்படுகின்றன.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கங்களுக்காக, காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள் கையிலுள்ள காசு மற்றும் வெளிநிற்கும் வங்கி மேலதிகப் பற்றுக்கள் நீங்கலான வங்கியிலுள்ள வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

**செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

செலுத்தப்பட வேண்டிய கணக்குகளுக்கான பொறுப்புக்கள் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற காசு மற்றும் காசிற்குச் சமமான தொகைகளில் கொண்டு செல்லப்படுகின்றன.

**நிர்ணயிக்கப்பட்ட நன்மைகளின் கிரயம்**

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் கொடுபடத்தக்க ஓய்வு பெறுகின்ற பணிக்கொடைகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடு, நிதிக் நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியினைக் காட்டுகிறது. அனைத்து வருடாந்த இலாபங்களும் இழப்புக்களும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் மற்றும் நிதிச் செயலாற்றுகை கூற்று என்பவற்றில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

**அரசாங்க மானியம்**

இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியிலிருந்து பெறப்படும் கொடைகள் தொடர்பான செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்ற காலப்பகுதியின் வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

அடுத்துவரும் காலப்பகுதியில் செலவினமாகக் கருதப்படக் கூடிய அரச மானியங்களைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் பிற்போடப்பட்ட வருமானமாக அங்கீகரிக்கப்படும். பொறுப்புக்களைக் கழித்த, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் உட்பட ஏனைய பொறுப்புக்களினால் பிரதிபலிக்கப்படும் அரச கொடைகள் (பெறப்பட்ட கொடைகளின் கணக்கு மீதான பொறுப்புக்கள் தவிர்ந்தவை) பொறுப்புக்களாக அங்கீகரிக்கப்படுகின்றது.

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 3. நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| உள்ளவாறு | மோட்டார் வாகனங்கள் | | அலுவலக உபகரணங்கள் | | தளபாடங்களும் பொருத்திகளும் | | நூலகப் புத்தகங்கள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 31-திசெ-17 ரூபா | 31-திசெ-16 ரூபா | 31-திசெ17 ரூபா | 31-திசெ16 ரூபா | 31-திசெ-17 ரூபா | 31-திசெ-16 ரூபா | 31-திசெ-17 ரூபா | 31திசெ-16 ரூபா | 31-திசெ-17 ரூபா | 31-திசெ-16 ரூபா |
| **கிரயம்** | | | | | | | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் | 51,160,000 | 43,770,000 | 8,983,997 | 9,360,745 | 11,155,887 | 10,630,338 | 3,190,899 | 3,126,300 | **74,490,783** | 66,887,383 |
| சேர்த்தல்கள் | - | 7,390,000 | 3,552,858 | 1,125,835 | 341,027 | 499,926 | 7,500 | 64,599 | **3,901,385** | 9,080,360 |
| கைதவிர்ப்புக்கள் | - | - | (28,990) | (1,476,960) | - | - | - | - | **(28,990)** | (1,476,960) |
| மாற்றல்கள் | - | - | - | (25,623) | - | 25,623 | - | - | **-** | - |
| ஆண்டின் இறுதியில் | 51,160,000 | 51,160,000 | 12,507,865 | 8,983,997 | 11,496,914 | 11,155,887 | 3,198,399 | 3,190,899 | **78,363,178** | 74,490,783 |
| **திரண்ட தேய்மானம்** | | | | | | | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் | 23,610,665 | 15,253,500 | 7,418,484 | 8,034,715 | 9,888,950 | 9,631,099 | 3,137,108 | 3,093,729 | **44,055,207** | 36,013,043 |
| ஆண்டிற்கான தேய்மானம் | 8,432,000 | 8,357,165 | 952,372 | 860,722 | 358,744 | 257,851 | 26,149 | 43,379 | **9,769,265** | 9,519,116 |
| கைதவிர்த்தலுக்கான தேய்மானம் | - | - | (28,989) | (1,476,953) | - | - | - | - | **(28,989)** | (1,476,953) |
| மாற்றல்கள் | - | - | (25,620) | - | 25,620 | - | - | - | **-** | - |
| ஆண்டின் இறுதியில் | 32,042,665 | 23,610,665 | 8,316,247 | 7,418,484 | 10,273,314 | 9,888,950 | 3,163,257 | 3,137,108 | **53,795,483** | 44,055,206 |
| **குறைத்தெழுதிய பெறுமதி** | | | | | | | | | | |
| **ஆண்டின் இறுதியில்** | 19,117,335 | 27,549,335 | 4,191,618 | 1,565,513 | 1,223,600 | 1,266,937 | 35,142 | 53,791 | **24,567,695** | 30,435,577 |

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| உள்ளவாறு | 31-திசெ-17<br>ரூபா | 31-திசெ-16<br>ரூபா |
|---|---|---|
| **4. வைப்புக்கள் (நடைமுறையல்லாத)** | | |
| வாடகை வைப்புக்கள் | 6,879,736 | 6,879,736 |
| பாதுகாப்பு காப்பக வைப்பு | 100,000 | |
| | 6,979,736 | 6,879,736 |
| **5. இருப்புக்கள்** | | |
| எழுது கருவிகள் | 516,831 | 576,864 |
| **6. பெறவேண்டிய கணக்குகுள்** | | |
| முற்கொடுப்பனவுகள் | 2,899,773 | 3,147,666 |
| வைப்புக்கள் | 30,000 | 30,000 |
| முற்பண கொடுப்பனவுகள் - IFIAR 2018 (குறிப்பு 7.1) | 446,650 | - |
| | 3,376,423 | 3,177,666 |
| **7. காசு மற்றும் காசுக்கு சமமான** | | |
| கையிலும் வங்கியிலுமுள்ள காசு | 484,452 | 2,110,767 |
| வங்கியில் காசு - IFIAR 2018 (குறிப்பு. 7.1) | 7,443,448 | - |
| | 7,927,900 | 2,110,767 |

**7.1** சுதந்திரமான கணக்காய்வு மீளாய்வாளர்களின் சர்வதேச அமைப்பின் வெளிக்கள செயலமர்வினை SLAASMB இலங்கையில் 2018 பெப்ரவரியில் நடாத்தவிருக்கின்றது. வெளிநாட்டு பங்குபற்றுனர் களிடமிருந்து பெறப்பட்டவைகளும் SLAASMB இன் பங்களிப்பும் காசும் காசுக்கு சமமானவற்றுடன் தொடர்புறுகின்றன. பதிவுக் கட்டணங்கள் பிற்போடப்பட்ட வருமானமாக காண்பிக்கப்படுகின்றன. முற்பண கொடுப்பனவானது மேற்கொள்ளப்பட்ட செவினங்களையும் முற்பண செலுத்துகை நடவடிக்கைகளையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

| | 31-திசெ-17 | 31-திசெ-16 |
|---|---|---|
| **8. பிற்போடப்பட்ட வருமானம் - அரச மானியம் (நடைமுறையல்லா)** | | |
| வருட ஆரம்பத்தில் உள்ளவாறு மீதி | 37,208,854 | 36,272,974 |
| நடைமுறையல்லாத சொத்துக்களை கையேற்க அரசின் மானியங்களின் பயன்பாடு | 532,561 | - |
| நடைமுறையல்லாத சொத்துக்களுக்காளக கிடைத்த அரச மானியம் | 1,793,824 | 1,690,360 |
| பணிக்கொடைக்காக கிடைத்த மானியமும் முதலீடும் | 1,575,000 | 7,390,000 |
| வைப்புக்களில் அதிகரிப்பு (நடைமுறையல்லா) | 100,000 | 1,740,960 |
| ஆண்டிற்கான தேய்மானமும் கடன்தீர்ப்பனவு செலவினமும் | (9,769,265) | (9,519,116) |
| பணிக்கொடை நிதியத்திற்கான வட்டி பெறுவனவு | 455,461 | 358,981 |
| அலுவலக உபகரணங்கள் கைதவிர்ப்பு நட்டம் | (1) | (7) |
| ஆண்டிற்கான கடப்பாடுகள் | (1,640,428) | (725,298) |
| | 30,256,006 | 37,208,854 |
| **பிரதிநிதிப்படுத்துபவை** | | |
| ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள் | 24,567,695 | 30,435,576 |
| வைப்புக்கள் (நடைமுறையல்லாத) | 6,979,736 | 6,879,736 |
| (பணிக்கொடைக்கான ஏற்பாடு)/ பணிக்கொடைக்கான மிகை | (1,291,425) | (106,458) |
| | 30,256,006 | 37,208,854 |

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| உள்ளவாறு | 31-திசெ-17<br>ரூபா | 31-திசெ-16<br>ரூபா |
|---|---|---|
| **9. கடப்பாடுகளுக்கான தீர்மானிக்கப்பட்ட நன்மைகள் / (சொத்துக்கள்)** | | |
| ஆண்டின் ஆரம்பத்தின் போதான மீதி | 4,717,728 | 3,992,430 |
| ஆண்டிற்கான சாட்டுதல்கள் | 696,832 | 574,972 |
| ஆண்டிற்கான வட்டி | 488,756 | 483,483 |
| உள்ளவாறான இலாபம் / நட்டங்கள் | 454,840 | (333,157) |
| | 6,358,156 | 4,717,728 |
| ஆண்டின் போதான கொடுப்பனவுகள் | - | - |
| | 6,358,156 | 4,717,728 |
| பணிக்கொடை நிதியம் (குறிப்ப 9.1) | (5,066,731) | (4,611,270) |
| ஆண்டின் ஆரம்பத்தின் இறுதியிலான மீதி | 1,291,425 | 106,458 |
| பின்வரும் எடுகோள்களைப் பயன்படுத்தி கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதி அளவிடப்பட்டது. | | |
| எதிர்பார்க்கப்பட்ட சம்பள அதிகரிப்பு வீதம் | 10% | 10% |
| கழிவு / வட்டி விகிதம் | 12.11% | 10.94% |
| அலுவலர் புரள்வுக் காரணி | 9% | 9% |
| பணிக்கொடைக்காக பகுதியளவில் நிதியளிக்கப்பட்டுள்ளது | | |
| **9.1 பணிக்கொடை நிதியம்** | | |
| ஆண்டின் ஆரம்பத்தின் போதான மீதிகள் | 4,611,270 | 4,252,289 |
| ஆண்டின் போதான முதலீடு | - | - |
| ஆண்டின் போதான வட்டிப் பெறுவனவு | 455,461 | 358,981 |
| ஆண்டின் கொடுப்பனவுகள் | - | - |
| ஆண்டின் இறுதியின் போதான மீதி | 5,066,731 | 4,611,270 |
| **10. பிற்போடப்பட்ட வருமானம் அரசாங்க மானியம்** | | |
| ஆண்டின் தொடக்கத்தில் மீதி | 2,290,471 | 923,934 |
| இருப்புக்கள் மற்றும் பெறத்தக்க கணக்குகளில் அதிகரிப்பு/(வீழ்ச்சி) | 138,724 | 1,363,985 |
| காசு மற்றும் காசிற்குச் சமனானவைகளில் அதிகரிப்பு/(வீழ்ச்சி) | 5,817,133 | 617,841 |
| கொடுபடத்தக்க கணக்குகளில் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | (7,121,569) | (615,290) |
| | 1,124,759 | 2,290,471 |
| **பிரதிநதித்துவப்படுத்தப்படுவது** | | |
| இருப்புக்கள் | 516,831 | 576,864 |
| பெற வேண்டிய கணக்குகள் | 3,376,423 | 3,177,666 |
| காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள் | 7,927,900 | 2,110,767 |
| கழி. பிற்போடப்பட்ட வருமானம் IFIAR செயலமர்வு | (6,719,098) | - |
| கழி: கொடுபடத்தக்க கணக்குகள் | (3,977,297) | (3,574,826) |
| | 1,124,759 | 2,290,471 |

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| உள்ளவாறு | 31-திசெ-17<br>ரூபா | 31-திசெ-16<br>ரூபா |
|---|---|---|
| **11. பிற்போடப்பட்ட வருமானம் - ஐகுஐயுசு செயலமர்வு** | | |
| பங்குபற்றுனர் கட்டணம் பெறுவனவு IFIAR 2018 (குறிப்பு 7.1) | 6,719,098 | - |
| **12. செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| கணக்காய்வாளரின் ஊதியம் | 320,000 | 160,000 |
| இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்குக் கொடுபடத்தக்க மானியங்கள் | 1,250,000 | - |
| மீளாய்வாளர்களுக்குச் செலுத்தப்படத்தக்க தொழில்சார் கட்டணம் | 260,000 | 230,000 |
| அலுவலர்களுக்குச் செலுத்தப்படத்தக்க ஊக்குவிப்புக்கள் | 1,014,000 | 1,014,000 |
| ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 1,133,297 | 2,170,826 |
| | 3,977,297 | 3,574,826 |

| திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | 31-திசெ-17<br>ரூபா | 31திசெ -16<br>ரூபா |
|---|---|---|
| **13. அரசாங்க மானியங்கள்** | | |
| இவ்வாண்டில் பெறப்பட்ட அரசாங்க மானியங்கள் | 78,656,000 | 75,099,770 |
| இயலுமையைக் கட்டியெழுப்ப பெறப்பட்ட அரசாங்க மானியங்கள | - | 23,420,000 |
| நடைமுறையல்லா சொத்துக்களின் வடிவில் பெறப்பட்ட மானியங்கள் | (1,575,000) | (7,390,000) |
| வாடகை வைப்பினை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மானியங்கள் | - | (1,740,960) |
| மூலதனச் செலவினத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட மானியங்கள் | (100,000) | |
| பணிக்கொடை நிதியத்தில் முதலீடு செய்யப்பட்ட மானியங்கள் | (1,793,824) | (1,690,360) |
| தேறிய நடைமுறைச் சொத்துக்களில் நிதியிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட | 1,165,713 | (1,366,536) |
| ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவுச் செலவுகள் | 9,769,265 | 9,519,116 |
| பணிக்கொடை நிதியம் மீது பெறப்பட்ட வட்டி | (455,461) | (358,981) |
| அலுவலகச் சாதனங்களின் விற்பனை மீதான நட்டம் | 1 | 7 |
| ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நன்மைப் பொறுப்புக்களின் ஏற்பாடு | 1,185,588 | 1,058,455 |
| ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நன்மைப் பொறுப்புக்களின் ஏற்பாடு | 86,852,282 | 96,550,511 |
| ஏனைய விரிவான வருமானத்தில் காட்டப்பட்ட நிர்ணயிக்கப்பட்டமீள் அளவீட்டுடன் தொடர்புடைய மானியம் | 454,840 | (333,157) |
| காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ள மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய | 87,307,122 | 96,217,354 |
| **14. கணக்காய்வாளர் ஊதியம்** | | |
| நடப்பாண்டு | 160,000 | 160,000 |
| (மிகை) / முன்னைய ஆண்டிற்கான குறை ஒதுக்கீடு | - | 3,180 |
| | 160,000 | 163,180 |

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| *திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | 31-திசெ-17<br>ரூபா | 31திசெ -16<br>ரூபா |
|---|---|---|
| **15. பதவியணியினர் கிரயம்** | | |
| அலுவலர் ஊதியங்கள் | 19,208,809 | 16,367,231 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 2,519,477 | 2,166,026 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 565,502 | 541,506 |
| நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடுகள் (குறிப்பு 14.1) | 730,127 | 751,397 |
| வாகன வாடகை மற்றும் சாரதிகளுக்கான கொடுப்பனவு | 1,512,489 | 1,001,901 |
| அலுவலர் ஊக்குவிப்பு | 12,168,000 | 11,921,000 |
| உடல்நல காப்புறுதி | 518,379 | 528,243 |
| அலுவலர் நலன்புரி | 849,060 | 719,984 |
| ஏனைய அலுவலர் நன்மைகள் | 4,279,256 | 5,352,845 |
| | 42,351,100 | 39,350,133 |
| **15.1 நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள்** | | |
| ஆண்டிற்கான கட்டணம் | 696,832 | 574,972 |
| ஆண்டிற்கான தேறிய வட்டி | 33,295 | 176,425 |
| | 730,127 | 751,397 |
| ஏனைய வரிவான வருமானமாக வெளிப்படுத்தப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபங்கள்/இழப்புக்கள் | 454,840 | (333,157) |
| காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட மொத்த நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் | 1,184,967 | 418,240 |
| **16. விசேட இயலளவு கட்டியெழுப்பல் திட்டங்கள்** | | |
| கட்டிட வாடகை | - | 627,297 |
| பதவியணியினர் பயிற்சியும் அபிவிருத்தியும் | - | 10,678,146 |
| வேலைத்தள கணக்காய்வு பரிசோதனை | - | 3,865,548 |
| நிதி அறிக்கை தொடர்பான அறிக்கையிடல் | - | 1,755,542 |
| பொது மக்கள் தெளிவுபடுத்தல் | - | 3,754,358 |
| மீளாய்வாளர்களுக்கான பயிற்சி | - | 998,150 |
| | - | 21,679,041 |
| **17. ஏனைய நிர்வாகச் செலவினம்** | | |
| ஆண்டறிக்கை | 357,002 | 353,563 |
| கணனி பராமரிப்பு | 180,508 | 203,433 |
| உபகரண பராமரிப்பு | 231,060 | 186,861 |
| தொலைபேசி | 658,273 | 584,959 |
| வாகனப் பராமரிபு | 1,614,599 | 597,541 |
| அலுவலக செலவினங்கள் | 501,432 | 462,159 |
| சட்ட மற்றும் துறைசார் கட்டணம் | 308,383 | 331,200 |
| உள்ளகக் கணக்காய்வுக் கட்டணம் | 170,500 | 156,500 |
| நானாவித செலவினம் | 590,870 | 602,109 |
| | 4,612,627 | 3,478,325 |

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**18. மூலதன ஈடுபடுத்தல்**

2017 சனவரி 01 ஆந் திகதி முதல் வாடகைக்கு எடுக்கப்பட்ட புதிய அலுவலக தொகுதிகள் உட்கட்டமைப்பை வடிவமைப்பதற்கும் நிர்மாணிப்பதற்கும் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. எனினும், இது வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. (2016 திசெம்பர் 31 இல் - இல்லை)

**19. தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்**

2018 IFLAR வெளிக்கள செயலமர்விற்கு வசதிகளை வழங்க அரச பெறுகை செயன்முறையின் கீழ் நிகழ்ச்சி முகாமையாளர் வரைறுக்கப்பட்ட எய்கன் ஸ்பென்ஸ் டிரவல்ஸ் தனியார் கம்பனிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது. சபை உறுப்பினர் செல்வி நிலன்தி சிவபிரகாசம் எய்கன் ஸ்பென்ஸ் தொகுதியின் பிரதான கணக்காளர் ஆவர். நிகழ்ச்சி முகாமையாளருக்குரிய மொத்த ஒப்பந்தக் கட்டணங்கள் ரூபா 980,000 + வரிகள் ஆகும்.

**20. நிகழகத்தக்க பொறுப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எவ்வித நிகழகத்தக்க பொறுப்புக்களும் காணப்படவில்லை. (2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு - இல்லை).

**21. நிதி நிலைமைக் கூற்றின் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள**

நிதிக் நிலைமைக் கூற்றின் திகதிக்குப் பின்னர், நிதிக் கூற்றில் ஏதேனும் சீராக்கத்தினை அல்லது வெளிப்படுத்துகையினை அவசியமாக்கும் பொருண்மையான நிகழ்வுகள் எதுவும் இடம் பெறவில்லை.

# குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில் முயற்சிகள்

இச்சட்டத்தினாலும் அச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதி முறைகளாலும் பின்வருவன குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகளான வரையறை செய்யப்பட்டுள்ளன.

- அனுமதிப்பத்திரம் உடைய வங்கிகள்.
- காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கம்பனிகள்
- குத்தகை வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் கம்பனிகள்.
- வருமதியாளர்களின் நிலுவைக்கு ஈடாக கழிவு முறையில் நிதி வழங்கும் கம்பனிகள்.
- நிதிக் கம்பனிகள்.
- பங்குவிநியோகத்தர்களின் பங்குத் தரகர்களாக வியாபாரத்தை கொண்டு நடாத்த அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள கம்பனிகள்.
- நம்பிக்கை கூறு அலகு வியாபாரத்தை நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள கம்பனிகள்
- நிதி முகாமைத்துவக் கம்பனிகள்.
- பங்குப் பரிவர்த்தணையை மேற்கொள்ளுவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள கம்பனிகள்.
- ஏனைய கம்பனிகள் -

  (அ) ரூபா 500 மில்லியனுக்கு அதிகமான தொகையை வியாபாரப் புரள்வாகக் கொண்டவை.
  (ஆ) முன்னைய நிதியாண்டு இறுதியில் பங்குடமையாளர்களின் உரிமையாண்மையாக ரூபா 100 மில்லியனுக்கு அதிகமான தொகையைக் கொண்டவை.
  (இ) முன்னைய நிதியாண்டு இறுதியில் ரூபா 300 மில்லியனுக்கு அதிகமான பெறுமதியான மொத்தச் சொத்தினைக் கொண்டவை.
  (ஈ முன்னைய ஆண்டு இறுதியில் வங்கிகளுக்கும் மற்றைய நிதி நிறுவனங்களுக்கும் ரூபா 100 மில்லியனுக்கு அதிகமான தொகையை பரிப்புக்களாக கொண்டவை.
  (உ) 1000க்கு அதிகமான தொழிலாளர்களை பணியாளர் குழாமாகக் கொண்டவை.

- பொருட்கள் விற்பனை அல்லது சேவைகள் வழங்கலில் ஈடுபட்டுள்ள பொதுக் கூட்டுத்தாபனங்கள்.
- மேற் குறிப்பிட்ட வர்க்கங்களுள் ஏதாவதொன்றில் அடங்கும் கம்பனிகளின் குழுமியம் ஒன்று. இத்தேவைக்கு ஒரு கம்பனிகளின் குழுமியம் என்பது, கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கணக்குகள் ஒன்றாக்கப்பட வேண்டிய ஒரு உயர்நிலைக் கம்பனியையும் அதன் கீழ் நிலை உரிமங்களையம் குறிக்கும்.

# குறிப்பு

**நிறுவனத்தின் பெயர்**
இலங்கை கணக்கியல் மற்றும்
கணக்காய்வு நியமங்கள்
கண்காணிப்பு சபை

**சட்டக் கோவை**
நியதிச் சபையானது 1995ஆம்
ஆண்டின் 15ஆம் இலக்க
இலங்கை கணக்கியல் மற்றும்
கணக்காய்வு நியமங்கள்
சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.

**கூட்டிணைக்கப்பட்டுள்ள நாடு**
இலங்கை

**தலைமை அலுவலகம்**
3ஆம் மாடி,
293, காலி வீதி,
கொழும்பு 3.
தொலைபேசி: 011 2301210
தொலைநகல்: 011 2301211
மின்னஞ்சல்: slaasmb@sltnet.lk

**வெப்தளம்**
www.slaasmb.gov.lk

**கணக்காய்வாளர்கள்**
வெளியக கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
திணைக்களம்
இல. 306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்ல

**உள்ளக கணக்காய்வாளர்**
எதிரிசிங்க அன்ட் கம்பனி
சார்ட்டட் அக்கவுண்டன்ட்
45, பிரேபுறுக் வீதி
கொழும்பு 02

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி

**சட்ட ஆலோசகர்கள்**
சட்டமா அதிபர்
சட்டமா அதிபர் திணைக்களம்
கொழும்பு 12